New Rubi Jewellers

நகைகளும்,
திருத்த வேலைகளும்
உங்கள்
தேவைகளுக்கு
உடனுக்குடன்
செய்து தரப்படும்

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05



ASI Boucherie

ஆடு, மாடு, கோழி
இறைச்சி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

195, rue du Fbg st-denis, 75010 Paris
Tel : 01 42 05 23 78
M : La Chapele
Gare du Nord



# ஈழமுரசு®

முரசு 03 | 27 மார்ச் – 02 ஏப்ரல் 2012 | முழக்கம் 128



www.paristamil.com

www.பரிஸ்தமிழ்.கொம்


# ஐ.நாவில் சிறீலங்காவைக் காப்பாற்றியது இந்தியா

## மன்மோகன்சிங் மன்றாட்டம் - மகிந்த ஏற்க மறுப்பு!

## அமெரிக்கா, கனடா களமிறங்கத் தயாராகின்றன





## வாழ்ந்த மண்ணையே மீளக் கேட்கின்றோம் சர்வதேசத்திற்கு ஏன் இது புரியவில்லை?







## ஓபாமாவிற்கான நேசக்கரம்

## ஐ.நா. பிரேரணை நிறைவேற்றப்பட்டதில் தமிழர்களுக்கு என்ன பயன்?


AUTOSUR
CONTROLE TECHNIQUE AUTOMOBILE

உங்கள் வாகனங்களை Controle Technique
செய்து கொள்ள நீங்கள்
நாட வேண்டிய இடம்
Le Bourget விமானநிலையம் முன்பாக

C.T.M

Autosur C.T.M
Mathavan Balakrishnan
24 Route de Flandres,
95500 Bonneuil En France
Tél.: 01 45 91 06 78 Fax: 01 45 91 05 96
Portable: 06 68 10 83 85



EURO RESTO SERVICE

உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்

33 bis, rue du Château Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55



தமிழ்க்கதிர்
தமிழ்தேசியத்தின் அனலக் கதிர்
www.tamilkathir.com



VIJAY V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92



SRI MAHAL

உங்கள் அனைத்து
மளிகைத்
தேவைகளுக்கும்.

197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12


புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் – பிரான்ஸ்

ASS. DES HABITANTS DE PUNGUDUTIVU-FRANCE
புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் – பிரான்ஸ்

2012


23ம் பக்கம்




VG CASH & CARRY
மளிகை ஸ்தாபனம்
ஆசிய மற்றும் ஆபிரிக்க
மளிகைப்பொருட்கள்.
Tél.: 01 48 67 56 44
34, Avenue de la République
93150 Le Blanc Mesnil
(à côté la Poste)



VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமுரசு®

MAISON DES MEDIAS

முரசு 03 | 27 மார்ச் – 02 ஏப்ரல் 2012 | முழக்கம் 128


"சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை, அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# ஐ.நாவில் சிறீலங்காவைக் காப்பாற்றியது இந்தியா

## மன்மோகன்சிங் மன்றாட்டம் – ஏற்க மகிந்த மறுப்பு!

## அமெரிக்கா, கனடா களமிறங்கத் தயாராகின்றன

(27.03.2012, செவ்வாய்க்கிழமை).

ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் கடந்த 22ம் திகதி சிறீலங்கா மீது அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை, 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 24 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. (நாடுகளின் விபரங்களை பக்கம் 6இல் பார்க்கவும்) சிறீலங்காவிற்கு கிடைத்த இந்தத் தோல்வி மகிந்த ராஜபக்சவின் இனஅழிப்புக்கு கிடைத்த மிகப்பெரும் அடியாதவே கருதப்படுகின்றது. இந்தியா உட்பட 22 நாடுகளின் ஆதரவு இருப்பதாக இறுதிவரை நம்பியிருந்த சிறீலங்காவிற்கு, இறுதியில் இந்தியாவும் கைவிட்டது பாரிய தாக்கமாக அமைந்துள்ளது.

இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக சிறீலங்கா இறுதிவரை போராடியது. பிரதமர் மன்மோகன் சிங்குடன் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகளவு தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்துடன் கடிதத்தினையும் அனுப்பிவைத்திருந்தார். அத்துடன், இதற்காக தனது சிறப்புப் பிரதிநிதியாக டில்லிக்கு தனது நெருங்கிய உதவியாளரான பந்துல ஜயசேகரவை மகிந்த ராஜபக்ச அனுப்பி, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் கலந்துரையாட வைத்திருந்தார். அத்துடன், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் உயர்மட்டத் தலைவர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். இந்தியாவும் சிறீலங்காவிற்கு ஆதரவாக கருத்துக்களையும் வெளியிட்டுவந்தது.

எனினும், தமிழகத்தில் இருந்து எழும் கடுமையான அழுத்தங்கள் காரணமாக ஒருகட்டத்தில் நடுநிலை வகிக்கும் முடிவுடன் இருந்த இந்தியா, இறுதி நாளில் அமெரிக்காவின் பிரேரணையை வரவேற்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றியதுடன், அதற்கு ஆதரவாகவும் வாக்களித்திருந்தது சிறீலங்காவிற்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சிறீலங்காவின் அதிர்ச்சியைப் புரிந்துகொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கடந்த 19ம் திகதி மகிந்த ராஜபக்ச அனுப்பிய கடிதத்துக்கு வாக்களிப்பு முடிவடைந்ததன் பின்னர் கடந்த 23ம் திகதியே பதில் கடிதத்தை அனுப்பிவைத்தார்.

அந்தக் கடிதத்தில் மகிந்தவை சாந்தப்படுத்தும் வகையில் பல்வேறு பாராட்டுக்களை தெரிவித்திருந்ததுடன், அமெரிக்காவின் அறிக்கையில் உள்ள விடயங்களைத் திருத்தியமைத்து சிறீலங்காவைத் தாங்கள் காப்பாற்றியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தக் கடிதத்தில் மன்மோகன் சிங் தெரிவித்திருந்ததாவது, 'ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைத் தீர்மானம் தொடர்பாக நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. இலங்கையில் நீடித்து வந்த போர் 2009ம் ஆண்டு மே மாதத்துடன் முடிவுக்கு வந்ததில் இருந்து, மூன்று ஆண்டுகளாக சிறீலங்காவும் இந்தியாவும் இணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு

(4ம் பக்கம் பார்க்க)



கனேடிய நாடாளுமன்றத் தூதுக்குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாருடன்.


Noisiel, Torcy, Lognes, Noisy Champs

நிலா மளிகை ஸ்தாபனம்



இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும் ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், தொலைபேசி அட்டைகள்

8, Allée Boris Vian - 77186 Noisiel

Noisiel RER Mairie Annexe du Luzard,

Noisiel RERக்கு முன்பாக

Police Municipale, Hotel Hipotel Marne la vallée école, Manché

பாடசாலைகள் சந்தை ஆகியவற்றுக்கு அருகில்

Tel. : 09 51 89 69 80

**A5 HOT FOOD TAKEAWAY FOR LEASE**

Located within a parade of shops in New Malden (Borough of Kingston)
Convenient parking space for customers in-front of store
Lease for 9½ years
Very low Rent and Rates
*Rent of ~£5000 per annum
*Rates of ~£1600 per annum with up to 100% relief available for small businesses
Well equipped and spacious kitchen
Customer serving area with hot, cold and ambient food display cabinets, cool drinks fridge and space for few tables & chairs

Call 07772 290036 to discuss further / arrange a viewing

**A D IMMO**

பிரான்ஸ் முழுவதும் வீடு வாங்க, விற்க, வாடகைக்குப் பெற நம்பிக்கையான முழுத் தமிழ் நிறுவனம்

APPARTEMENTS

| | | |
|---|---|---|
| APP 4P | LE GRAND | 175 000 Euro |
| APP 3P | NOISSY LE SEC | 170 000 Euro |
| APP 4P | CHOISY LE ROI | 175 000 Euro |
| APP 4P | BONDY | 170 000 Euro |
| APP 4P | BOBIGNY | 160 000 Euro |
| APP 3P | DRANCY | 155 000 Euro |
| APP 3P | EPINY | 150 000 Euro |
| APP 3P | LE BOURGET | 170 000 Euro |

PAVILLON

| | |
|---|---|
| DRANCY 4P | 270 000 Euro |
| BONDY 8P | 340 000 Euro |
| LA COURNEUVE 4P | 310 000 Euro |
| BOBIGNY 4P | 280 000 Euro |
| LE BOURGET 4P | 290 000 Euro |
| GAGNY 4P | 288 000 Euro |
| IE BLANC MESNIL 4 P | 260 000 Euro |
| SEVRAN 4 P | 255 000 Euro |



தம்பி : 06 27 50 09 57 அஜந்தன் : 06 60 93 45 27

252, Rue Anatole France 93700 Drancy RER Drancy Tél : 01 48 30 72 62 Fax : 01 48 32 51 32



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE Gratuit
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

Impression / Printing:
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

கனடா:
Pulathil Weekly
E.Mail-pulathilcanada@gmail.com
P.O.BOX # 4068, 1235 McCowan Rd,
Scarborough, ON, M1H 0A4
416 418 0822

சந்தா விபரம்
(அஞ்சல் செலவு மட்டும்)
வருட சந்தா
பிரான்ஸ் 60€
ஐரோப்பா 65€
ஏனைய நாடுகள் 70€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

# ஐ.நாவில் சிறீலங்காவைக் காப்பாற்....

நிவாரணம், புனர்வாழ்வு உதவிகளை வழங்கி வருகின்றன. தேசிய முக்கியத்துவம் நிறைந்த இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய அமைப் புகளுக்கு சிறீலங்கா அரசு அளித்து வரும் ஒத் துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லிணக்க ஆணைக்குழு அளித்த பரிந் துரைகளை நடைமுறைப்படுத்த நீங்கள் காட்டும் முனைப்புக்காக மகிழ்ச்சி அடைகிறேன். இலங் கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளிட்ட சமூகத்தினர் எதிர்கொள்ளும் பல வேறு பிரச்சினைகளுக்கு அரசியல்தீர்வை அளிக் கும் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை நடை முறைப்படுத்துவது குறித்து கடந்த காலங்களி லும் நாம் விவாதித்துள்ளோம். இனங்களைக் கடந்து அளிக்கப்படும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலம் தான் அவர்களுக்கு நீதி, கண்ணி யம், சமத்துவம், சுயமரியாதை கிடைக்கும். அதற்காக இலங்கை அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா உதவியாக இருக் கும். ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர் மானத்தைப் பொறுத்தவரை, சாதகமாக வழி காணும் முயற்சியில் சிறீலங்காத் தரப்புடன் இணைந்து முயற்சி மேற்கொள்ளும்படி நான் இந்திய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தேன். தீர்மானத்தில் இடம்பெற்ற வரிகளில், சிறீலங்கா வுக்கு சமமான நிலையை ஏற்படுத்த இந்தியா அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, அதில் வெற்றி பெற்றதை நீங்கள் அறிவீர்கள். அந்த நோக்கத்தின்படி, இலங்கையில் நிலை யான, பாதுகாப்பான, வளமான சூழ்நிலையில் அனைத்து சமூகத்தினரும் வாழ மேற்கொள்ளும் நடவடிக்கையில் இந்தியா தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கும். இதன் மூலம் வலுவாக உள்ள இந்திய - சிறீலங்கா உறவு மேலும் வலுப் பெறும்' என்று மன்மோகன்சிங் தனது கடிதத் தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், மன்மோகன்சிங்கின் கடிதத்தை சிறீலங்கா உடனடியாகவே நிராகரித்துள்ளது. சிறீலங்காவின் அரச ஊடகமான 'த ஐ லண்ட்' இந்த நிராகரிப்பை கடந்த ஞாயிற்றுக்கிழமை இதழில் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஐ லண்ட் தெரிவித்துள்ளதாவது, தீர்மான வரைபில் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு இந்தியா தலையிட்டிருந்தது என உரிமை கோரியிருப் பதை சிறீலங்கா கடந்த சனிக்கிழமை உறுதி யாக நிராகரித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விதிமுறைகள் மற்றும் நடைமுறை களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட நாட்டின் இணக் கப்பாட்டுடன் மட்டுமே தொழில்நுட்ப உதவியை வழங்குவது அடிப்படை அம்சமாகும். பேரவை யின் உரிமைகள் தொடர்பான நடைமுறை விதிகளில் இந்த விடயம் கொள்கை ரீதியில் அங்கமாக இருப்பதாக அந்த வட்டாரங்கள் வலி யுறுத்தியுள்ளன. சிறீலங்காவைக் காப்பாற்ற இந் தியா மாற்றங்களை அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதென அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. நகல் வரைபை இந் தியா மாற்றியமைதத்து என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், மனித உரிமைகள் பேரவையின் நடைமுறை விதிகளில் உள்ளடக் கப்பட்டிருப்பவற்றையே அவர்கள் அறிமுகப்படுத் தியுள்ளனர் என்று அதிகாரி ஒருவர் கூறினார். 'சிறீலங்கா அரசாங்கத்தின் இணக்கப்பாட்டு டனும் கலந்தாலோசனையுடனும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால்' என்ற தீர்மானத்தின் நகல் வரைபே திருத்தப்பட்டுள்ளது. 'சிறீலங்கா அர சாங்கத்தின் இணக்காப்பாட்டுடனும் கலந்தா லோசனையுடனும் ஆணை கொண்டோருக்கு வழங்கப்படும் சம்பந்தப்பட்ட விசேட நடைமுறை கள் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானி கரின் அலுவலகம் கொண்டிருக்க வேண்டுமென ஊக்குவிக்கப்படுகிறது. மனித உரிமைகள் பேர வையானது தனது 22வது அமர்வில் இத்தகைய உதவிக்கான அறிக்கையை பேரவையின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் வழங்குவதற்கு மேற்குறிப் பிட்ட நடவடிக்கைகளையும் கோரிக்கைகளையும் விடுக்க வேண்டும்' என்று மாற்றியமைக்கப்பட் டுள்ளது.

இந்தியாவின் திருத்தத்துடன் சிறீலங்கா செய் வதற்கு எதுவும் இல்லையென வட்டாரங்கள் அழுத்தி உரைக்கின்றன. இது எமக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் எமது நலன் சார்ந்ததாக இருந்தால் அவர்கள் எங்களுடன் கலந்துரையாடியிருக்கவேண்டும். அமெரிக்கா சம்பந்தப்பட்ட திருத்தத்திற்குப் பதி லாக இந்தியா இதனைச் செய்திருக்கிறது. மார்ச் 21 மாலை வரை அமெரிக்க - இந்திய முன் னகர்வு பற்றி இந்தத் தீர்மானத்திற்கு ஆதர வளித்த நாடுகள் உட்பட பல நாடுகள் அறிந் திருக்கவில்லை என்று அந்த வட்டாரங்கள் கூறு கின்றன என்று ஐ லண்ட் குற்றம்சாட்டியுள்ளது.

அமெரிக்காவும் கனடாவும்

நிலைமை இவ்வாறிருக்க, சிறீலங்காவிற்கு அடுத்த பாரிய அழுத்தம் ஒன்றை ஏற்படுத்த அமெரிக்காவும் கனடாவும் தயாராகிவருவதாக தெரியவருகின்றது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான தமது விசாரணை அறிக்கையை அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் போர்க்குற்ற விவகாரங்களைக் கவனிக் கும் தூதுவர் ஸ்டீபன் ராப் அடுத்தவாரம் அமெ ரிக்க நாடாளுமன்றின் செனட் சபையில் சமர்ப்பிக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. சிறீலங்கா தொடர்பாக தூதுவர் ஸ்டீபன் ராப் அமெரிக்க செனட் சபைக்கு சமர்ப்பிக்கும் மூன்றாவது அறிக்கை இதுவாகும். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து நேரில் விசாரணைகளை நடத்துவதற்காக கடந்த பெப்ரவரி மாதம் ஸ்டீபன் ராப் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது அவர் சிறீலங்கா அரச தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அத்துடன் முல்லைத்தீவுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் பற்றிய தகவல்களையும் அவர் சேகரித்திருந்தார். இந்தப் பயணத்தின் அடிப்படையிலேயே அவர் செனெட் சபைக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க வுள்ளார்.

இதற்கிடையே, கனேடிய வெளிவிவகார அமைச் சர் ஜோன் பெயட்டின் பணிப்பின் பேரில், கன டாவின் ஆப்கானிஸ்தானிற்கான முன்னாள் தூது வரும் கனடிய நாடாளுமன்ற உறுப்பினருமான கிரிஸ் அலெக்ஸ்சாண்டர் தலைமையில் நாடா ளுமன்ற உறுப்பினர்களான ரிக் டகஸ்ரா, செனட் டர் வேன் வைட் ஆகியோரடங்கிய மூவர்குழு இலங்கை சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து பல பகுதிகளுக்கும் சென்று நிலைமையை ஆராய்ந்ததுடன், சிறீலங்கா மீதான கடுமையான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளனர்.

'மனித உரிமைகள் மீறப்படுவதை நாம் பார்த் துக்கொண்டிருக்க முடியாது. வன்னிப்போரின் இறுதி நாட்களில் அப்பாவி மக்கள் கொல்லப் பட்டுள்ளமை தொடர்பான யுத்தக் குற்றச்சாட்டு விடயத்தில் நாம் எந்தவித விட்டுக் கொடுப்பிற் கும் தயாரில்லை. இதேபோல ஆயுதம் இல்லா மல் சரணடைய வந்தவர்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்' என்று ஜன நாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து உரையாடியபோது கனேடிய நாடாளுமன்றக் குழுவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போதே கனேடிய பிரதமர், சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஒரு மறைமுக செய்தியை வழங்கியிருந்தார் என்பதையும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு பதில் வழங்க அவகாசமும் வழங்கி இருந்தார் என் பதையும் அவர்கள் மனோ கணேசனிடம் சுட் டிக்காட்டியுள்ளனர்.

முன்னதாக யாழ்குடாவிற்கு சென்றிருந்த இவர்கள்,

(23ம் பக்கம் பார்க்க)

வேலைக்கு ஆள்தேவை
பரிசில் இயங்கிவரும் உணவகத்துக்கு
தண்டூரி - சீஸ்நாண் செய்வதில்
அனுபவம் வாய்ந்த சமையல் ஆள்தேவை
தொடர்புகளுக்கு:
01 47 31 05 06 / 01 42 70 12 23
(11 மணி - 15.00 மணி : 18.00 மணி - 23.00 மணி)

Tamil Speaking Call: 0203 384 7535
Email Us: info@airchoice.co.uk
Website: www.airchoice.co.uk
For Emergency Flights - Call & Select Option 3in!
AirChoice.co.uk
COLOMBO from £220*
ETIHAD £166*
SriLankan £300*
OMAN AIR £220*
JET AIRWAYS £130*
KUWAIT AIRWAYS £220*
QATAR AIRWAYS £285*
Gulf Air £166*
Emirates £405*
FLIGHTS WORLDWIDE+Taxes
INDIA fr £155*
MALAYSIA fr £150*
CANADA fr £130*
Subject to availability, Terms & Conditions apply. Exclude taxes*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு

# சர்வதேசத்துடன் முரண்படத் தயாராகிறது சிறீலங்கா விடுதலையை எமதாக்க என்ன செய்யவேண்டும்?

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சிறீலங்காவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது உலகத் தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி என்றும் அதைவிட, இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தந்ததன் ஊடாக ஈழத் தமிழர்களுக்கு இந்தியா நம்பிக்கையூட்டும் வகையில் வெளிப்படையாகச் செயல்பட்டிருப்பதாக'வும் ஊடகங்களில் பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானத்தை இறுதிவரை ஏற்றுக்கொள்ள மறுத்த இந்தியா, இறுதிநாளன்று இதனை வரவேற்றதுடன் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் வாக்களித்தது. எப்போதும் சிறீலங்காவைக் காப்பற்ற மட்டுமே முனைகின்ற இந்தியா, இம்முறை கைவிடும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்ட போதும், சிறீலங்காவை **அடித்துக் காப்பாற்றியது** என்பதே உண்மை.

அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையில் இருந்த மிகவும் முக்கிய ஒரே விடயமான சர்வதேசத்தின் (ஐ.நா.) தலையீட்டைத் தவிர்த்து, இந்தப் பிரேரணையில் கூறப்பட்டவற்றை நிறைவேற்றுகின்றதா என்பதை ஆராயும் பொறுப்பை சிறீலங்காவிடமே வாங்கிக்கொடுத்து சிறீலங்காவைக் காப்பாற்றி இருக்கின்றது இந்தியா. அதாவது, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்திருக்கின்றது இந்தியா. சிறீலங்காவிற்கு எதிராக வாக்களித்து தமிழகத்தின் கொந்தளிப்பை அடக்கியதுடன், சர்வதேசத்தின் தலையீட்டில் இருந்து சிறீலங்காவையும் அது (தற்போதைக்கு) விடுவித்துள்ளது.

ஆனரல், இந்தப் பிரேரணையில் உள்ள வேடிக்கை என்னவென்றால் முதலில் இது 'சிறீலங்காவிற்கு எதிரானது' என்பதே பிழையானது. தாங்கள் நடத்திய குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, தாங்களே விசாரணைகளை நடத்தியது சிறீலங்கா. அந்த விசாரணைகளில் கிடைத்த பரிந்துரைகளை நிறைவேற்றவேண்டும் என்பதுதான் அமெரிக்கா கொண்டுவந்த ஐ.நா. தீர்மானத்தின் முக்கிய அம்சம். அதாவது, மகிந்த அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் சிலவற்றை அமெரிக்கா தனது பிரேரணையில் உள்வாங்கி, அதனை சிறீலங்கா நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டும் என்று ஜெனீவா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்து, 47 நாடுகளில் 24 நாடுகளின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றியும் உள்ளது.

ஆனால், இந்தப் பிரேரணையை, தங்களுக்கு எதிரானதாகப் பூதாகரமாக்கிய சிறீலங்கா, இது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதற்கு எதிரான போராட்டங்களையும் இலங்கையில் மிகக் கடுமையாக முன்னெடுத்துள்ளது. அமெரிக்கப் பிரேரணை தமிழீழத்தையே பிரித்துக்கொடுத்துவிட்டதுபோன்று, பிரேரணையைக் கொண்டுவந்த அமெரிக்காவிற்கு எதிராக மிகமோசமான பிரச்சாரங்களும், அமெரிக்கப் பொருட்கள் மீதான புறக்கணிப்புப் போராட்டங்களும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், அமெரிக்க கொண்டுவந்த பிரேரணையில் தமிழர்களுக்கு நன்மைபயக்கக்கூடிய விடயங்கள் எதுவும் இல்லை என்பதுதான் உண்மை. இதனை ஏற்கனவே இந்தப் பகுதியில் சுட்டிக்காட்டியும் இருக்கின்றோம். ஆனாலும், சிறீலங்காவின் இன்னொரு கொடூரமான பக்கத்தைச் சர்வதேசம் உணர்ந்துகொள்வதற்கும், தங்கள் மீது தாங்களே சுமத்திய குற்றச்சாட்டிற்கு தீர்வுகாண மறுக்கும் சிறீலங்கா, சர்வதேசம் சுமத்துகின்ற குற்றச்சாட்டுக்களை ஏற்று அதற்குத் தீர்வு வழங்காது என்பதனால், தமிழர்கள் தங்களது நீதிக்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நியாயத்தை இந்தத் தீர்மானத்தின் மீதான வெற்றி வழிவகுக்கும் என்பதானாலும் இதனைத் தமிழர்கள் வரவேற்க முனைந்தார்கள் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

அத்துடன், 'ஈழத்தமிழர்களின் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கு வாசல்கதவினை திறந்துவிட்ட வெற்றியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வெற்றி அமைகின்றது' என்று உலகத்தமிழர் இயக்க தலைவர் பழ.நெடுமாறன் ஐயா அவர்கள் குறிப்பிட்டுள்ளதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. எனவே, தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் சாதகமான விடயங்களோ அல்லது சிங்களவர்களைப் பாதிக்கக்கூடிய பாதகமான விடயங்களோ இதில் இல்லாது போனாலும், சிறீலங்கா ஆட்சியாளர்கள் மீதான உத்தியோகபூர்வமான சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கான முதல்படியாக இது அமைந்துவிட்டது.

எனவேதான் சிறீலங்கா இதற்கு எதிராகப் போராட முனைந்துள்ளது. சிறீலங்கா ஆட்சியாளர்களினதும், இனவாதிகளினதும் இந்தப் பிரேரணைக்கு எதிரான கூச்சல்களும், குழப்பங்களும் மேற்குலகுடனான முரண்களுக்கே வழிவகுக்கும் என்பது திண்ணம். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிறீலங்காவிற்காக களமிறக்கப்பட்டவர்கள் நடத்திய காட்டுத்தர்ப்பாரில் ஐ.நா. மனித உரிமைகள் சபையே அதிர்ச்சியடைந்து கண்டனங்களை வெளியிட்டுள்ளது. இங்கு தொடங்கிய சிறீலங்காவின் எதிர்ப்புப் போராட்டம் இனி மேலும் விஸ்வரூபம் எடுக்கும் என்பதற்கான சம்பவங்கள் நிகழத் தொடங்கிவிட்டன. அதாவது கொள்ளிக்கட்டையை எடுத்து தலையைச் சொறிந்தவன் கதையாக, இத்தீர்மானத்தை செயற்படுத்துவதை விடுத்து, இதற்கு எதிரான போராட்டங்களை சிங்களம் முன்னெடுக்கத் தொடங்கிவிட்டது. இது சர்வதேசத்திற்கும் சிறீலங்காவிற்கும் இடையிலான முரணாகவே விரிவடையும் என்பது உறுதி.

'பயங்கரவாதம்' என்ற ஒற்றைச் சொல்லுடன் சர்வதேசத்தை ஏமாற்றி, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்தின் உதவியுடன் சிறீலங்கா அழித்தது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு சர்வதேசம் துணை நின்றது. சர்வதேசத்தையும் தமிழர்களையும் மோதவிட்டே இந்த வெற்றியைக்கண்டது சிறீலங்கா.

இப்போது 'மனித உரிமை மீறல்கள்', 'போர்க் குற்றங்கள்' என்ற வார்த்தைப் பிரயோகங்களுடன் சிறீலங்கா ஆட்சியாளர்களை ஒடுக்குவதற்கு சர்வதேசம் தயாராகிவிட்டது. சர்வதேசம் - சிறீலங்கா இடையிலான இந்த முரணை தமிழ் மக்கள் தங்களுக்கு சாதகமாக மாற்ற வேண்டும். தங்களின் விடுதலையை அறுவடை செய்வதற்கான களமாக்க வேண்டும். அதனை நோக்கியே இராஜதந்திர நகர்வுகளை தமிழ் மக்களின் விடிவிற்காக உண்மையோடு உழைக்கின்ற ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும்.

# நாட்டில் மனித உரிமைகளோ, சட்டங்களோ பின்பற்றப்படவில்லை

## – சிறீலங்காவின் முன்னாள் நீதிபதி

நாட்டில் மனித உரிமைகளோ சட்டங்களோ முறையாக பின்பற்றப்படவில்லை என ஓய்வு பெற்ற சிறீலங்காவின் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குற்றம் சட்டியுள்ளார். சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கத்தினர் ஒழுங்கு செய்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாறும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேச அழுத்தங்களை முறியடிப்பதற்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய ஆட்சியிலுள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து சட்டங்களுக்கும் முரணாக வகையில் முன்னாள் இராணுவத் தளபதியை சிறையில் தடுத்து வைத்திருக்கிறார்கள். சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனங்களுக்கு முரணானது இந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு அமைய சிறீலங்காவும் நடந்து கொள்ளும் என கையெழுத்திட்டுள்ளது. எனவே இவற்றை கருத்திற் கொண்டு சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சிறீலங்காவானது சர்வதேச நாடுகளுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது புத்திசாதூரியமான விடயமல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குஞ்சுகளையும், குருத்துக்களையும் என தமிழர்களை அழித்தபோது வராத கண்ணீர் மகிந்த தோற்றபோது எப்படி வரும் தாயே?



# கேணல் ரமேஷ் படுகொலை

## சிறீலங்காவின் மேலும் ஒரு போர்க் குற்றத்தை பிரித்தானிய ஊடகம் அம்பலப்படுத்தியது



தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் ரமேஷ் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதற்கான புதிய ஆதாரங்களை பிரித்தானியாவில் இருந்து வெளியாகும் குளோபல் மெயில் ஏடு வெளியிட்டுள்ளது. கேணல் ரமேஷ் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தும் ஒளிப்படக் காட்சிகளும், அவரது உடைகளை மாற்றும் காட்சிகளும் ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அதன் பின்னர் ரமேஸ் படுகொலை செய்யப்பட்ட படம் வெளிவந்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. வெளியாகிய அந்தப் படத்தின் ஊடாக கொல்லப்பட்டவர் தனது கணவர் என்பதை ரமேசின் மனைவியும் உறுதிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் பிரித்தானிய ஊடகம் தமக்குக் கிடைத்த வீடியோ காட்சியில் இருந்து புதிய படங்களை வெளியிட்டுள்ளது. அதில் ரமேஷ், சாதாரண மனிதராக சாறம், சேட்டுடன் இருக்கும் காட்சியும், பின்னர் விடுதலைப் புலிகளின் சீருடையான காற்சட்டையுடன் இருக்கும் காட்சியும் அதன் பின்னர் முதுகில் உள்ள காயத்துக்கு போடப்பட்டிருந்த கட்டை பிரிப்பது, பின்னர் சிறீலங்காப் படையின் தங்களது பச்சைநிற சீருடையை கட்டாயப்படுத்தி அணியச் செய்து, விசாரணை நடத்துவது, கடைசியில் கோரமாக அடித்தும் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்வதும் என நிழற்படங்கள் இடம் பெற்றுள்ளன.



படுகொலை செய்யப்பட்டு தரையில் கிடத்தப்பட்டுள்ள தளபதி ரமேஷின் உடலை கட்டையில் வைத்த நிலையில் ஒரு படமும், பின்னர் எரிக்கப்படுகிற படத்தையும் 'The Death Of Colonel Ramesh - கேணல் ரமேஷின் மரணம்' என்ற தலைப்பில் குளோபல் மெயில் ஏடு செய்தியாக வெளியிட்டுள்ளது. சிறீலங்கா அரச படைகளின் சிப்பாய் ஒருவரால் கொடுக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இப்படத்தில், சிங்களப் படைகளின் முகங்களும் குளோபல் மெயில் ஏட்டினால் மறைக்கப்படுள்ளன. கேணல் ரமேஷிடம் விசாரணை நடத்தும் சிறீலங்காப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோரது இருப்பிடம் குறித்த கேள்விகளையே கேட்டதாகவும் குளோபல் மெயில் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான கேணல் ரமேஷ் 1986ம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்டு வந்தார். கருணாவின் துரோகத்தனத்தைப் பொறுக்க முடியாமல், கருணாவின் படுகொலையில் இருந்து தப்பித்து வன்னியை வந்தடைந்தவர். மகிந்தவின் இன அழிப்புப் போருக்கு எதிராக களமுனையில் இறுதிவரை போராடிய ஒரு உறுதிமிக்க தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 இலட்சம் வெளிநாட்டு நாணயத் தாள்களுடன் இந்தியர் கைது

28 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை தனது கைப்பைக்குள் மறைத்து வெளிநாட்டுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட இந்தியர் ஒருவரை கடந்த புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்தில் அமெரிக்க டொலர், கனடிய டொலர், ஜப்பான் யென், ஸ்ரேலிங் பவுண் ஆகியன காணப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். 40 வயதுடைய இவர், சிங்கப்பூருக்கு செல்லத் தயாராக இருந்தபோதே கைது செய்யப்பட்டார்.

## மாவீரர் துயிலுமில்ல கிணற்றினுள் வீழ்ந்து சிப்பாய் பலி

யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப்பகுதியில் காவலுக்கு நின்ற சிறீலங்காப் சிப்பாய் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக கோப்பாய் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கண்டி தென்னெதனியவைச் சேர்ந்த பிரதீப் ஜெயசெகர (21) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்தவராவார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இஇவரது மரணம் தொடர்பாக கோப்பாய் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை இடித்தழித்துவிட்டு அங்கு முகாம் அமைத்து தங்கியிருந்த சிங்களப் படையினரில் ஒருவருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

## குளத்தில் நீராடிய இரு பெண்கள் பலி

குளத்தில் குளிக்கச் சென்ற இருபெண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். கலென்ன பிரதேசத்தைச் சேர்ந்த கமலாவதி (64), இரோஷா லக்மாலி என்ற இருவரே இந்தச் சம்பவத்தில் மரணமடைந்துள்ளனர். இவ்விரு பெண்களும் புதன்கிழமையன்று தங்கொட்டுவ யோகியான பகுதியிலுள்ள குளத்தில் ஆடைகளை துவைத்து விட்டு குளத்தில் குளிக்கச் சென்றபோதே நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர். நீரில் மூழ்கிய இருவரின் சடலங்களையும் அப்பகுதி மக்கள் மீட்டெடுத்து வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

## பலையூரில் குழுமோதல் வாள் வெட்டில் மூவர் காயம்!

உதைபந்தாட்ட விளையாட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக இளைஞர் குழுக்களுக்கிடையே மூண்டசண்டை காரணமாக 3 பேர் காயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதைபந்தாட்ட விளையாட்டின் போது இரு அணியினருக்கும் இடையில் பரஸ்பர வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இவ் வாக்குவாதம் தொடர்ந்து சென்றமையால் இரு குழுக்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. மேற்படித் தகராறு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை முச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை வழிமறித்து ஒரு குழு தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவத்தில் றெக்னோ (23) என்பவர் வாள் வெட்டிற்கு இலக்கானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் ஒருவர் தற்கொலை!

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்கு வீதி 90ம் இலக்க வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டின் குளியலறையில் இருந்து இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் சிவம்புரபுள்ளை சண்முகநாதன் என தெரியவந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம் தெரியவரவில்லை.

## குப்பிவிளக்கில் படித்துக்கொண்டிருந்த மாணவி தீப்பிடித்து பலி

யாழ்ப்பாணத்தில் குப்பிவிளக்கை வைத்துப் படித்துக்கொண்டிருந்த பாடசாலை மாணவியொருவர் தீப்பிடித்து எரிந்த நிலையில் கடந்த 24ம் திகதி சனிக்கிழமை காலை உயிரிழந்துள்ளார். சுன்னாகம் புகையிரத வீதியைச் சேர்ந்த சுன்னாகம் மயிலானை மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சந்திரசேகரம் சுஜித்தா (16) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார். வெள்ளிக்கிழமை இரவு இம்மாணவி குப்பிவிளக்கை வைத்துப் படித்துக்கொண்டிருந்தபோது அவரது ஆடையில் திடீரென தீப்பிடித்துள்ளது. உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இம்மாணவி மறுநாள் காலை உயிரிழந்துள்ளார்.

## மாலத்தீவு முன்னாள் ஜனாதிபதி சிறீலங்கா சென்றார்

மாலத்தீவில் கடந்த சில மாதத்துக்கு முன்பு காவல்துறையினர் புரட்சியில் ஈடுபட்டதால் ஜனாதிபதி முகமது நஷீத் பதவியை இழந்தார். உடனடியாக அவரது மனைவி மற்றும் குழந்தைகள் சிறீலங்காவிற்கு தப்பிச்சென்று விட்டனர். இந்நிலையில் நஷீத் கடந்த வெள்ளிக்கிழதை சிறீலங்காவிற்கு திடீரென்று புறப்பட்டு சென்றார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள், கட்சியின் முக்கிய தலைவர்கள் ஆகியோரும் சென்றனர். இலங்கையில் இருந்தபடியே அவர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவார் என தெரிகிறது.

## நெடுந்தீவு சிறுமி கொலை – மரபணுப் பரிசோதனையில் சந்தேகம்

பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நெடுந்தீவு சிறுமியின் குற்றச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் மரபணு பரிசோதனை நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் எழுந்

(08ம் பக்கம் பார்க்க)

# சிறீலங்காவிற்கு ஆதரவளித்தது முஸ்லீம் நாடுகளே!



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சிறீலங்கா மீது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு எதிராக 15 நாடுகள் வாக்களித்துள்ளன. மேலும் 8 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தன. இதில் முஸ்லீம் நாடுகளே அதிகம் (9) . இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிக்க மகிந்த அரசு முஸ்லீம் கட்சியினதும், அமைப்புக்களினதும் பிரமுகர்களையும் தனது அமைச்சிலுள்ள அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோரையும் களமிறக்கியிருந்தது. இவர்கள் வாக்களிக்கும் தகுதிகொண்ட நாடுகளுக்கு பயணம்செய்து அந்நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்தினர். இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்கள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டதையே இந்நாடுகளுக்கு தொடர்ந்து வேதமாக ஓதி அவர்களின் ஆதரவைத் தக்கவைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்த முஸ்லிம் நாடுகள் பங்களாதேஸ், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, கட்டார், சவூதி அரேபியா. வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்த முஸ்லிம் நாடுகள் ஜோர்தான், கிர்கிஸ்தான், மலேசியா.

இதில் அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்த முஸ்லிம் நாடுகளாக லிபியா, நைஜீரியா, கமரூன் மட்டுமே உள்ளன. லிபியாவில் கடாபியின் ஆட்சி இருந்திருந்தால் அந்த வாக்கு சிறீலங்காவிற்கே போயிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. நைஜீரியா, கமரூன் நாடுகளே சிறீலங்கா மீதான பிரேரணையை ஆதரித்த முஸ்லீம் நாடுகளாகும். அதுவும், தீர்மானத்தைத் தோற்கடிக்கக்கோரி சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆபிரிக்க நாடுகளான உகாண்டாவுக்கும் பின்னர், நைஜீரியா, கமரூன் உள்ளிட்ட நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டார். கமரூன் பிரதமர் பிலெமொன்யாங் மற்றும் நைஜீரிய வெளிவிவகார அமைச்சர் ஒலுக்பெங்கா அயோடேஜி அசிருவுடனும் அவர் பேச்சுக்களை நடத்தினார். ஆனாலும் இந்தப் பேச்சுகளின் மூலம் அமைச்சர் ஜி.எல்.பீரிசினால் எதையும் சாதிக்க முடியவில்லை. சிறீலங்காவின் கோரிக்கைகளைப் புறக்கணித்துவிட்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க கமரூனும், நைஜீரியாவும் கூறின என்பது குறிப்பிடத்தக்கது. சிறீலங்காவிற்கு சார்பாக வாக்களித்தமை பெரும் திருப்தியளிப்பதாக கூறிய சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்நாடுகள் மீது பல்வேறு வகையிலும் செலுத்தப்பட்ட கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் 15 நாடுகள் தங்களுக்கு ஆதரவாக வாக்களித்தமை தமக்கு பெரும் திருப்தியளிக்கிறது. அந்நாடுகளுக்கு தமது நன்றியையும் மிகப்பெரும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதாகவும் அமைச்சர் பீரிஸ் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, அமெரிக்கா எதனைக் கொண்டுவந்தாலும் எதிர்ப்பது என்ற நிலைப்பாடுடைய கியூபா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும் சிறீலங்காவிற்கு ஆதரவாக நின்றன.

| தீர்மானத்தை ஆதரித்த நாடுகள் | தீர்மானத்தை எதிர்த்த நாடுகள் |
|---|---|
| 01. அமெரிக்கா | 01. சீனா |
| 02. இந்தியா | 02. உகாண்டா |
| 03. மெக்சிகோ | 03. இந்தோனேசியா |
| 04. நைஜீரியா | 04. மாலத்தீவு |
| 05. ஆஸ்திரியா | 05. வங்கதேசம் |
| 06. பெல்ஜியம் | 06. கியூபா |
| 07. பெனின் | 07. காங்கோ |
| 08. கமரூன் | 08. ஈக்வடார் |
| 09. சிலி | 09. குவைத் |
| 10. கோஸ்டா ரிகா | 10. மவுரிடானியா |
| 11. செக் குடியரசு | 11. பிலிப்பைன்ஸ் |
| 12. கவுதமாலா | 12. கத்தார் |
| 13. ஹங்கேரி | 13. ரஷ்யா |
| 14. இத்தாலி | 14. சவுதி அரேபியா |
| 15. லிபியா | 15. தாய்லாந்து |
| 16. மொரிஷியஸ் | |
| 17. நார்வே | **பங்கேற்காத நாடுகள்** |
| 18. பெரு | 01. அங்கோலா |
| 19. போலந்து | 02. பர்கினா பாசோ |
| 20. மால்டோவா குடியரசு | 03. போஸ்ட்வானா |
| 21. ரோமானியா | 04. டிபோட்டி |
| 22. ஸ்பெயின் | 05. ஜோர்டான் |
| 23. சுவிட்சர்லாந்து | 06. மலேசியா |
| 24. உருகுவே | 07. கிர்கிஸ்தான் |
| | 08. செனகல் |

# ராஜபக்சவை விலங்கிட்டு இழுத்து வந்து தமிழக மாணவர்கள் போராட்டம்



தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் கடந்த 19ம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. திருவள்ளுவர் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்ட பேரணியில், கலந்து கொண்ட மாணவ – மாணவிகள் ஈழப்போரின் போது நடந்த கொடூரமான நெஞ்சை பிழியும் காட்சிகள் அடங்கிய நிழற்படங்களை எடுத்து சென்றனர். அத்துடன், இனப்படுகொலை புரிந்த சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போன்று வேடமிட்ட ஒருவரை இரும்புசங்கிலியால்பிணைத்து இழுத்து வந்தனர். பின்னர் அவரை சவுக்கால் அடிப்பது போன்றும், அவருக்கு தண்டனை வழங்குவது போன்றும் போராட்டம் நடைபெற்றது. இதற்கிடையில் மாணவ–மாணவிகள் தங்கள் கையில் ஏந்தி வந்த ஈழப்போர் காட்சிகளை பார்த்து மக்கள் அதிர்ச்சியடைந்ததுடன் பலர் கண்ணீர்விட்டும் அழுததாக தமிழக ஊடகங்கள் தமது செய்தியில் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐ.நா. பிரேரணை நிறைவேற்றப்பட்டதில் தமிழர்களுக்கு என்ன பயன்?

தாயகத்தில் இருந்து இளங்கீரன்

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்திருந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்தத் தீர்மானத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாமல், உள்ளார்ந்த அர்த்தங்களை உணர்ந்து கொள்ளாமல் தாம் அனுபவித்த அவலங்களுக்கான நியாயம் கிடைக்கவேண்டும், கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் மகிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நிச்சயமாக ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் தமிழர்கள் அனுபவித்த அவலங்களுக்கு ஒரு சிறிய ஆறுதலைக்கூட பெற்றுக் கொடுத்திருக்கவில்லை. உண்மையாகவும் வெளிப்படையாகவும் சொல்லப்போனால் தமிழர்களுடைய பெயரைச் சொல்லியே சர்வதேச சதிகாரர்களால் தமிழர்கள் மௌனிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதற்கு தமிழர்களின் பிரதிநிதிகள் தாங்களே என மார்தட்டிக் கொள்ளும் சில மனிதர்களும் காரணம். வரலாறும், வரலாற்று மாந்தர்களும், உதிரம் சிந்தி, உயிர்க் கொடை செய்து பெற்றுக்கொடுத்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தையும் தமிழர்கள் நாங்கள் தவற விட்டிருக்கின்றோம். அமெரிக்கா தலைமையில் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சிறீலங்கா அரசிற்கு எதிரானதல்ல. சிறீலங்கா அரசினால் யுத்த நிறைவில் உருவாக்கப்பட்டிருந்த சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் அறிக்கையினைப் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே இந்த தீர்மானம். இதில் தமிழர்களுக்கு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. ஒரு நாட்டின் அரசாங்கம் தான் நியமித்த ஆணைக்குழு தனக்கெதிரான ஒரு முடிவை எழுதுவதற்கு ஒப்புதலளித்திருக்குமா? நிச்சயமாக கிடையாது.




**தமிழ்தேசியக் கூட்டமைப்பும் கூட இராஜதந்திரம் என்ற போர்வையில் செய்திருப்பது மிகப்பெரிய துரோகம் என்றே கருதவேண்டியிருக்கின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானபோது அதை மறுதலித்து அதில் பிழைகள் இருப்பதை 105 பக்க அறிக்கையில் வெளிப்படுத்தியிருந்த கூட்டமைப்பு, ஆணைக்குழு அறிக்கையினை அடியொற்றியே அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டுவரப்படுகின்றது. ஆணைக்குழுவின் அறிக்கையினை இலங்கையில் நிராகரித்து விட்டு ஜெனீவாவில் ஆதரிக்க முடியுமா?**

இங்கு நடைபெற்றது சுயாதீனமானதும், சுதந்திரமானதுமான ஒரு ஆணைக்குழு விசாரணை கிடையாது. இந்த ஆணைக்குழு இந்த முடிவையே எடுக்கப்போகின்றது என்பது சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். அல்லது பேசப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த தீர்மானமே எடுக்கப்படவேண்டும் என்பதை அரசு நிச்சமாகவே சொல்லியிருக்கும். இதனடிப்படையில்தான் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குற்றச்சாட்டுக்களுடன் ஒருசிலர் மட்டுமே அதுவும் அவர்களின் விருப்ப வெறுப்புக்குட்பட்டு தொடர்பு பட்டிருக்கின்றனர் எனக்கூறி பொறுப்புக்கூறும் விடயத்தில் நழுவியிருக்கின்றது.

வடக்கில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளை அவதானித்த ஒருவன் என்றவகையில், அமர்வுகளில் மக்கள் சொன்ன எதுவும் இல்லை, மக்கள் சிந்திய கண்ணீர் இறுதி அறிக்கையில் பிரதி பலிக்கவில்லை. 30 வருடம் இங்கு வடக்கில் நடைபெற்ற அத்தனை படுகொலைகள் குறித்தும், அத்தனை கடத்தல்கள் குறித்தும் மக்கள் தெரிவித்திருந்ததோடு மட்டும் நின்றுவிடாமல் அதில் யார் ஈடுபட்டார்கள் என்றும் மக்கள் சொன்னார்கள். இதில் தனிப்பட்ட மனிதர்களே ஈடுபட்டனர் என்றால் அவை நடைபெற்ற காலப்பகுதியில் நடந்த சம்பவங்கள் குறித்து சிறீலங்கா அரசிற்குத் தெரியாமலிருந்ததா? நிச்சயமாக தெரியும்.

ஆனால் அவற்றுக்கு என்ன நியாயம் கிடைத்தது? யுத்தகாலத்தில் ஆலயங்கள் மீதும், மக்கள் குடியிருப்புக்கள் மீதும் நடத்தப்பட்ட குண்டுவீச்சுக்கள் குறித்தும் என்ன விசாரணை நடத்தப்பட்டது? எதுவுமே கிடையாது. இவை அனைத்தையும் ஆணைக்குழுவின் அமர்வுகளில் மக்கள் சொன்னார்கள். ஆனால் அவை எவையுமே ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் பிரதிபலிக்கவில்லை. இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது, மக்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள், குண்டுவீச்சுக்கள் குறித்தும் இறுதி யுத்தம் வரை சென்று மீண்டு வந்த மக்கள் சொன்னார்கள். அவையும் கூட ஆணைக்குழுவின் அறிக்கையில் பிரதிபலிக்கவில்லை.

இந்த நிலையில் குற்றவாளியே குற்றத்தை விசாரணை செய்த விந்தையின் வடிவமே நல்லிணக்க ஆணைக்குழுவும், அதன் அறிக்கையும். இதன் மூலம் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என எதிபார்த்திருந்தால் எம்மைப் போல ஏமாளிகள் வேறு யாருமே இருக்க முடியாது. இவ்வாறான ஆணைக்குழுவினால் கொண்டுவரப்பட்ட அறிக்கையினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே அமெரிக்கத் தீர்மானம் அமைகின்றது. ஆனாலும் இந்தத் தீர்மானம் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரானதென்றும், அதன் மூலம் தமிழர்களுக்கொரு நியாயம் கிடைக்கும் என்றும் கருத்துக்கள் மக்களின் அடிநெஞ்சில் விதைக்கப்பட்டது. அது எதிர்பார்ப்புக்களுடன் வாழ்ந்த அந்த மக்களின் நெஞ்சங்களில் முளைவிட்டு நம்பிக்கை தரும் அளவிற்கு வளரவும் செய்திருக்கின்றது. ஆனால் அவை போலியானவை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளும்போது நிச்சயமாக எங்களின் கைகளில் எதுவுமே இருக்காது.

இவ்வாறான தனக்குச் சாதகமான ஆணைக்குழுவின் அறிக்கையினை சிறீலங்கா அரசு எதற்காக எதிர்த்தது? எதற்காக இவ்வளவு கஸ்டப்படுகின்றது என்றெல்லாம் எண்ணத்தோன்றும். அதற்கும் காரணங்கள் சில இருக்கவே செய்கின்றது.

அதாவது தனக்கெதிராக கூறப்பட்டு ஐ.நாவில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுவதை அரசு விரும்பவில்லை. அதற்குமேல் ஆணைக்குழுவை அமைத்ததும், அறிக்கை விடுத்ததும் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கேயொழிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றோ அல்லது தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்றோ கிடையாது. அதாவது குறைந்தபட்சம் இந்த ஆணைக்குழுவின் அறிக்கையினையும் கூட நிறைவேற்ற அடிப்படையில் சிங்கள இனவாத சக்திகளுக்கு விருப்பமில்லை. இந்த நிலையில் நடந்த அனைத்தையம் மறந்துவிடுவோம் என்று கூறிக் கொண்டே தமிழர்களை வெறுமையாக்கிவிட்டு ஆக்கிரமிப்பைச் செய்வதற்கே மீட்பர்கள் இந்த வேசத்தை அரசு போட்டிருக்கின்றது. ஆக மொத்தத்தில் தமிழர்கள் குறித்தும், தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் எந்த திட்டமும் இந்த அரசிடம் இல்லை. இந்த அரசிடம் மட்டுமல்ல இனிமேல் எந்த அரசு வந்தாலும் அவர்களிடமும் இருக்கப்போவதில்லை.

அதுபோகட்டும் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்திருந்த தீர்மானத்திற்கு வாக்களிப்பு நடைபெறவிருந்தபோது சர்வதேச மட்டத்தில் இந்தியாவின் முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதியில் இந்தியா எடுத்திருந்த முடிவு தமிழகத்திலும் சரி இலங்கையிலும் சரி தமிழர்கள் மத்தியில் மகிழ்ச்சிகரமானதொரு சூழலை ஏற்படுதியிருந்தது. அதற்கு மேலே சொன்னதைப் போன்று அமெரிக்கத் தீர்மானம் தொடர்பாக தமிழர்களிடம் ஏற்படுத்தப்பட்டிருந்த நம்பிக்கையே இந்த மகிழ்ச்சிக்கு காரணம்.

ஆனால் இந்தியா செய்து முடித்தது முற்று முழுதான துரோகம் என்பதை தமிழர்கள் புரிந்து கொண்டாக வேண்டும். உள்ளார்ந்தமாகவே இந்தியாவிற்கு சிறீலங்கா அரசாங்கத்தை எதிர்க்கும் மனோபாவம் கிடையாது. ஆனால் தமிழகத்தில் எழுந்துள்ள அதிர்வலைகளை அடக்கவேண்டும். அதேவேளை சிறீலங்கா அரசையும் பகைக்கக்கூடாது.

(17ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. பொதுவாக யாழ். மாவட்டம் மட்டுமின்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இது போன்ற பாலியல் குற்றச்செயல்கள் தொடர்பாக, சந்தேக நபர்களின் மரபணு பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மேற்கொள்ளப்படுவது வழமை. ஆனால் நெடுந்தீவில் கொலை செய்யப்பட்ட சிறுமி தொடர்பான சந்தேக நபரின் மரபணு பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்தியர் முன்னிலையில் நடத்தாது ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சனல் 4ற்கு பதிலடியாக சிறீலங்காவின் புதிய காணொளி

பிரித்தானியாவின் செனல் 4 தொலைக்காட்சியினால் வெளியிடப்பட்ட இலங்கையின் `கொலைக் களங்கள்- தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள்` ஆவணப்படத்திற்கு பதிலடிகொடுக்கும் வகையில் `பயங்கரவாதத்தின் நிழல்கள்` (shadows of terror) என்ற காணொளி இலங்கையினால் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி காணொளியானது பாதுகாப்பு அமைச்சினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் காணொளியில் வழமைபோன்று தங்களது துப்பாக்கியின் முனையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் சிலரது பேட்டிகளை வெளியிட்டுள்ளது.

### வடக்கில் நாய்க்கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு

வடக்கில் ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கும் கட்டாக்காலி நாய்களின் கடிக்கு உள்ளாகுவோர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளன. நாய் கடிக்கு உள்ளானோரின் எண்ணிக்கை அரசினர் வைத்திய சாலைகளில் 110ற்கும் 250ற்கும் இடைப்பட்ட அளவில் பதிவாகி வருகிறது. இதில் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகி தகுந்த சிகிச்சை பெறாத பலர் இறக்கும் நிலையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுகாதாரப் பகுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. இதேவேளை, நாடு தழுவிய ரீதியில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் விசர் நாய்க்கடி சிகிச்சைக்காகவும் 121 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் சிறீலங்காப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

### கிழக்கில் ஆட்கடத்தல் இன்றும் தொடர்கிறது

போர் முடிவடைந்தபோதிலும் கிழக்குக்கு ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அரசு தோல்விகண்டுள்ளது. ஆள்கடத்தல், கைதுசெய்தல், தடுத்துவைத்தல், விசாரணை ஆகியவை போன்ற பெயர்களில் தினமும் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தும் செயல் இன்றும் கிழக்கில் தொடர்ந்த வண்ணம் உள்ளன என்று சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பு தெரிவித்துள்ளது.

### புத்தளத்தில் வைத்து பெல்ஜியப் பிரசை கைது

புத்தளம் - கற்பிட்டி பிரதேசத்தில் சிறீலங்காப் படையின் தீவிரவாத தடுப்புப் பிரிவு புலனாய்வாளர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சிறீலங்காவிற்கு வருகைத்தந்த காரணம் இது வரை அறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தீவிரவாதத் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது. இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகள் இருவர் உத்தியோகபற்றற்ற வகையில் சிறீலங்காவிற்குள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருக்கோவிலில் வாகனம் மோதி மாணவன் பலி

திருக்கோவில் பகுதியில் புதன்கிழமை மாலை கனரக வாகனமொன்று மோதியதில் மாணவன் ஒருவன் உயிரிழந்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றமேற்பட்டது. இதையடுத்து அங்கு சிறீலங்கா இராணுவத்தினரும் காவல்துறையினரும் குவிக்கப்பட்டு மக்கள் அடக்கப்பட்டனர். மாலை தனியார் வகுப்பு முடிந்து மாணவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது திருக்கோவில் பகுதியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்ற மண்வெட்டும் கனரக வாகனமொன்று கட்டுப்பாட்டை இழந்து திருக்கோவில் பிரதேச சபைக்கு முன்னால் நடைபாதை பகுதிக்கு சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது அந்த வாகனத்தில் சிக்கி மதனராஜா இலக்சன் (12 வயது) என்ற மாணவன் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

### முதலை கடித்து குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு படுவான்கரை மகிழவெட்டுவான் பிரதேசத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது முதலலையினால் இழுத்துச் செல்லப்பட்டு பலியானார். கடந்த 18ம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் கல்குடா ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த முத்தையா சந்திரகாந்தன் (23) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு இழுத்துச்செல்லப்பட்டுள்ளார். இவர் ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது வலை கல் ஒன்றில் சிக்கியபோது, அதனை எடுக்க முனைந்தபோது முதலை அவரை இழுத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குருநகரில் வாள்வெட்டு – கணவனும் மனைவியும் படுகாயம்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் புதன்கிழமை காலை இடம்பெற்ற வாள்வெட்டில் கணவன், மனைவி இருவரும் படுகாயமடைந்துள்ளனர். குருநகர் திருநகர் இராஜேந்திரா பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த 15 பேர் கொண்ட குழுவினரே இவர்கள் மீது வாள்வெட்டை மேற்கொண்டனர். மடுத்தின் சகாயராசா (50) இவரது மனைவியான சகாயசாரதி (45) ஆகிய இருவருமே வாள் வெட்டில் படுகாயமடைந்தனர். வாள் வெட்டை மேற்கொண்டதாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தமிழர் பூர்வீகத்துக்கே பூட்டு!

சிறீலங்கா இனவாத அரசுக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை 24 நாடுகளால் ஆதரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும் சிறீலங்காவில் சிங்களத்தின் தமிழ் மக்கள் மீதான வன்கொடுமைகள் நின்றபாடில்லை. அதுதொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

வலிகாமம் வடக்கில் தொடந்தும் உயர்பாதுகாப்பு வலயங்களாகவுள்ள பகுதிகளை, படையினர் இறுக்கமான முறையில் மேலும் மேலும் பலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கி உள்ளனர்.

ஓட்டகப்புலம் பிரதேசத்தில் 23 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இங்கிருந்து சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர், அதாவது வசாவிளான் வரைக்கும் கொங்றிட் தூண்கள் நாட்டப்பட்டு முள்ளுக் கம்பி வேலிகளை படையினர் அமைத்து வருகின்றமை தெரிந்ததே.

வலிகாமம், வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இதுவரை 8 கிராம சேவகர் பிரிவுகளில் ஒரு பகுதியும், 15 கிராம சேவகர் பிரிவுகளில் முழுமையாகவும் மீள்குடியேற்றத்திற்கான தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தவகையில், கே.கே.எஸ். தெற்கு ஜே.233, கே.கே.எஸ். மத்தி ஜே.234, கே.கே.எஸ் மேற்கு ஜே.235, குரும்பசிட்டி ஜே.242, மயிலிட்டி வடக்கு ஜே.246, தையிட்டி கிழக்கு ஜே.247, மயிலிட்டித் துறை மேற்கு ஜே.248, தையிட்டி வடக்கு ஜே.249, தையிட்டி மேற்கு ஜே.250, மயிலிட்டித்துறை வடக்கு ஜே.251, பலாலி மேற்கு ஜே.252, பலாலி கிழக்கு ஜே.253, பலாலி வடக்கு ஜே.254, பலாலி வட கிழக்கு ஜே.255, பலாலி தெற்கு ஜே.256 கிராம சேவகர் பிரிவுகளில் மீள்குடியேற்ற தடைவிதிக்கப்பட்ட பகுதிகளாகும்.

இந்த நிலையில் தற்போது, முட்கம்பிவேலிகள் அமைக்கப்பட்டு அந்தப் பகுதிகளை தொடர்ந்தும் கையகப்படுத்திப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என பிரதேச மக்கள் தொடர்ந்தும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு படையினரின் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை. என்று யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். வலி.வடக்குப் பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டுப் பல பிரதேசங்கள் கையளிக்கப்பட்டுள்ள போதும் அந்தப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்த படையினர் அனுமதிக்கவில்லை. வலி.வடக்கில் 23 கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாத நிலையில் படையினர் அங்கு நிரந்தர பாதுகாப்புவேலியை அமைத்து வருகின்றனர்.

மீள்குடியமர்வு தொடர்பாக படையினரிடம் தொடர்ச்சியாகக் கேட்டு வருகின்றேன். அண்மையில் பலாலி ஆசிரியர் கலாசாலையை விடுவித்துத் தருமாறும் கோரியிருந்தேன். அத்துடன் மக்களின் வாழ்விடங்களை விரைவில் விடுத்து அவர்களை சொந்த இடத்தில் குடியமர்த்த உதவுமாறும் படைத் தளபதியிடம் கோரியிருந்தேன்.

இதற்கு அவர்கள் இதுவரையில் சாதகமானபதில் எதனையும் வழங்கவில்லை படையினர் அனுமதியளித்தால் மாத்திரமே இந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தமுடியும். படையினரின் சாதகமான பதில் கிடைக்கும் வரை எதுவும் செய்ய முடியாது என்று யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இந்நிலையில், யாழ் சுழிபுரம் திருவடி நிலை கடற்கரைப் பகுதியில் சட்ட விரோதமாக கடற்படையினர் மணலை அகழ்ந்து வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் குறித்த பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளனர். 'பொது மக்கள் தெரிவித்ததைப் போல பல இடங்களில் சட்ட விரோதமாக மணல் அகழப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. இது குறித்து உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு




– கந்தரதன்

வந்து இத்தகைய சட்டவிரோத மணல் 'அகழ்வை தடுக்க உரிய நடவடிக்கை எடுப்போம்' என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் உறுதியளித்த போதும் படையினரின் அடாவடிகள் அங்கு தொடர்வதை எவராலும் தடுத்துநிறுத்த முடியவில்லை.

இதேவேளை, முல்லைத்தீவு நாயாற்றுவெளியில் அத்துமீறிக்குடியேறுவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் பார ஊர்திகளில் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கின்ற அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரஊர்திகளில், மீன்பிடிப்படகுகள், மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றுடன் தற்காலிக வீடுகளுக்குத் தேவையான பொருட்களையும் ஏற்றிச் சென்றிருக்கின்றனர். இதனை அறிந்த முல்லைத்தீவு மக்கள் பாரஊர்திகளை மறித்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இருப்பினும் சிறீலங்கா இராணுவத்தினரின் தலையீட்டுடன் பொருட்கள் இறக்கப்பட்டு நாயாற்று வெளிப்பகுதியில் வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டிருப்பதாக ,அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் இரு தினங்கள் இரு தொகுதிகளாக பாரஊர்திகள் முல்லைத்தீவைச் சென்றடைந்திருக்கின்றன. கடந்த புதன்கிழமை மட்டும் முப்பதிற்கும் மேற்பட்ட பாரஊர்திகள் நாயாற்று வெளியைச் சென்றடைந்திருந்தாக அந்த மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அதிகளவிலான மீன்கள் பிடிபடக்கூடிய முகத்துவாரத்தை அண்மித்த பகுதியில் முல்லைத்தீவு மீனவர்கள் மீன்பிடிக்க கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும், அதேபகுதியில் சிங்கள மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்றும் முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

இப்பிரதேச தமிழ் மக்களின் வாழ்வாதார தொழிலை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அடாவடித் தனம் குறித்து தாம் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டும் அதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் கணக்கெடுக்கவில்லை எனவும் இறக்குமதி செய்யப்பட்ட சிங்கள மக்களுக்கான வாடிகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலமைகள் குறித்து அவசர கூட்டம் ஒன்றை கூடி மக்களிடம் கருத்து வெளியிட்டுள்ள பிரதேசத்தின் படைத்தளபதி இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தரவு இதனை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். புதிதாக அழைத்து வரப்பட்ட மக்களுடன் இணைந்து தொழிலில் ஈடுபட வேண்டும் இல்லாவிடில் தேவையற்ற சிக்கல்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் எச்சரித்துள்ளார். இதற்கு யார் பதில் சொல்வது? இராணுவத்தின் பயங்கரவாதத்தை அழிப்பதற்கு யார் முன்வருவது? சர்வதேசமே வெறும் வாய்ப்பேச்சோடு தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுவைக்காதே. செயல்வடிவத்தில்தான் தமிழ்மக்களுக்கு தீர்வுவேண்டும். உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே சர்வதேசத்தின் காதுகளுக்கு ஒருமித்துக் குரல்கொடுப்போம்! இது சிந்திக்கும் நேரமல்ல நாம் சிந்தித்து செயற்படும் நேரம்!

(சூறையாடல்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை

ஈழமுரசுலீக்ஸ்
Eelamurazuleaks

# சேரமான்

## தந்திரிகளின் மறுமுகம் - 47

**சேரமானின் இந்தத் தொடர் கட்டுரைக்கு இதில் பெயர்குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது மறுப்பை எழுத்துமூலமாகத் தருவார்களானால் அதனைப் பிரசுரிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.**

**[ஆ-ர்]**

# ஒபாமாவிற்கான நேசக்கரம்

நீண்ட நாட்களாக தமது விடுதலை இயக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வந்த 'சிறீலங்காவின் உற்ற நண்பனான' அமெரிக்க பாது காப்புத்துறை துணை அமைச்சர் ஜேம்ஸ் கிளாட் அவர்கள், சிங்களப் படைகளிடம் கிளிநொச்சி வீழ்ச்சி கண்டதை தொடர்ந்து கடும் தொனியில் தமக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தமைக்காக அமெரிக்காவுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சிகளை கைவிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, கடந்த தொடரில் நாம் குறிப்பிட்டமை போன்று தம்மை நம்பி மாவிலாற்றிலிருந்து கிளிநொச்சி வரை இடம்பெயர்ந்த நான்கரை இலட்சம் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பது. மற்றையது, கிளாட் அவர்களின் கடும் தொனி யிலான கடிதம் வன்னியை வந்தடைந்த பன்னிரண்டு நாட்களில் அவரது பதவிக் காலம் முடிவுக்கு வரவிருந் தமை. இவ்விரு விடயங்களுமே அமெரிக்காவுடன் நல்லு றவை ஏற்படுத்துவதற்கு தாம் எடுத்த முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளை கைவிடாதிருந்தமைக்கு அடிப்படைக் காரணங்களாக விளங்கின.

அமெரிக்க அதிபர் தேர்தலில் பராக் ஒபாமா அவர்கள் களமிறங்குவதற்கு முன்னர் வைகோ ஊடாக அவருடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு 2008ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் 'தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்த முயற்சி உருத்திரகுமாரன் குழுவினரால் பாழாக்கப்பட்டமை பற்றி எமது கடந்த தொடர்களில் ஏற்கனவே வெளிக்கொணர்ந் திருந்தோம். இந்நிலையில் 2009 ஜனவரி 20ஆம் நாளன்று அமெரிக்காவின் புதிய அதிபராக பராக் ஒபாமா அவர்கள் பதவியேற்க இருந்த பின்புலத்தில், அவருக்கு நேசக்கரம் நீட்டுவதன் ஊடாக அமெரிக்காவுடன் நல்லுறவைக் கட்டி யெழுப்புவதற்கான முயற்சிகளை தொடர்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆலோசிக்கப்பட்டது. ஆனால் இதிலும் ஒரு சிக்கல் இருந்தது.

ஒபாமாவை அணுகுவதற்கான வழிமுறைகளிலேயே இச்சிக்கல் இருந்தது. இது ஒரு விதத்தில் தமிழீழ விடு தலைப் புலிகளை திரிசங்கு நிலைக்கு இட்டுச்சென்றது என்றே கூறவேண்டும். அமெரிக்காவில் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கு விசுவாசமான ஆதரவாளர்கள் பலர் இருந்தாலும்கூட, அவர்களில் பெரும்பாலானோருக்கு அரசியல் உயர் மட்டங்களில் தொடர்புகள் இருக்கவில்லை. இவ்வாறான சூழலில் உருத்திரகுமாரன் குழுவினர் ஊடாக ஒபாமாவை அணுகுவதைத் தவிர வேறு வழிகள் எவையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை.

வீதியோர நடைபாதை உரையாடல்களை அதிகாரபூர்வ சந்திப்புக்களாகப் பூதாகரப்படுத்தியும், கீழ்நிலை அதிகாரி களுடனான தொடர்புகளை உயர்மட்டத் தொடர்பாடல்களாக வர்ணித்தும் அரசியல் பித்தலாட்டத்தில் உருத்திரகுமாரன் குழுவினர் ஈடுபடுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் உணர்ந்து கொண்டிருந்தாலும், அமெரிக்காவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப் பதற்கு வன்னியில் உடனடியாக மாற்றுத் தெரிவுகள் எவை யும் இருக்கவில்லை.

ஒபாமாவுடன் உருத்திரகுமாரன் குழுவினருக்கு நேரடி யாக எவ்வித தொடர்புகளும் இல்லை என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்து கொண்டிருந்தாலும்கூட, அவ ருக்கு நெருக்கமான அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் டனி டேவிஸ் அவர்களுடன் உருத்திர குமாரன் குழுவினர் தொடர்புகளைப் பேணி வந்தமை பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிந்திருந்தனர். இதுபற்றி ஏற்கனவே உருத்திரகுமாரன் குழுவினர் வன்னிக்கு தெரியப்படுத்தியுமிருந்தனர்.

அது மட்டுமன்றி 2004ம் ஆண்டின் இறுதியில் தமிழீழ தாயகத்தின் கடலோரங்களை தாக்கிய கடற்கோளுக்குப் பின்னர் 02.04.2005 அன்று வன்னிக்குப் பயணம் செய்த டனி டேவிஸ் அவர்கள் அப்பொழுது தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளராக விளங்கிய பா.நடேசன் அவர்களை சந்தித் துக் கலந்துரையாடியதோடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்கு ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டிருந்தார். இதன்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களும், பிரித்தானி யாவை சேர்ந்த தமிழ் மருத்துவர் ஒருவரும் கூடவிருந்தனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு – அதுவும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்க ளுக்கு – நன்கு பரிட்சியமான ஒருவராக டனி டேவிஸ் அவர்கள் விளங்கிய நிலையில் அவர் ஊடாக ஒபாமாவிற்கு நேசக்கரம் நீட்டும் முயற்சியொன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டது. இதுபற்றி பா.நடேசன் அவர்க ளுடன் மந்திராலோசனை நடத்திய தமிழீழ தேசியத் தலை வர் அவர்கள், ஒபாமாவிற்கான வாழ்த்துச் செய்தியொன்றை டனி டேவிஸ் ஊடாக அனுப்பி வைப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்.

இதற்கான கடிதம் தமிழீழ அரசியல்துறையினரால் தயாரிக்கப்பட்டு, அதில் 02.01.2009 அன்று தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் கையொப்பமிடப்பட்டது. ஆனால் இக்கடிதத்தை உருத்திரகுமாரன் குழுவினர் ஊடாக டனி டேவிஸ் அவர்களிடம் கையளிப்பதற்கு முன்னர், வேறு வழிகள் ஊடாக ஒபாமாவிடம் சேர்ப்பிப்பதற்கான முயற் சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டன. உருத்திரகுமாரனின் அரசியல் பித்தலாட்டம் தொடர்பான கடந்த காலப் பட்டறிவின் அடிப்படையிலேயே இவ்வா றான மாற்று முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டன. எனினும் அம்முயற்சிகள் கைகூடாத நிலையில் ஒபாமாவிற்கான தேசியத் தலைவரின் கடிதத்தை 08.01.2009 அன்று உருத்திரகுமாரனின் உதவியாளரான வழுதி (பொபி அல்லது பரந்தாமன்) அவர்களுக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அனுப்பி வைத்தார்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒபாமாவிற்கான தமிழீழ தேசியத் தலைவரின் கடிதத்தின் தமிழ்வடிவம் பின் வருமாறு அமைந்திருந்தது:

"தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
02.01.2009

திரு.பராக் ஒபாமா
அதிபர்
ஐக்கிய அமெரிக்கா

அன்புடையீர்,

ஐக்கிய அமெரிக்காவின் அதிபராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதையிட்டு தமிழீழ மக்களின் சார்பில் எமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தலில் நீங்கள் ஈட்டிய அமோக வெற்றி ஓர் உலக வரலாற்றுப் பதிவாகும். உங்களின் தலைமையில் உலக சமாதானத்தையும், பொருண்மிய மேம்பாட்டையும், நீதியை யும் முன்னிலைப்படுத்தும் புதிய சகாப்தத்திற்குள் அமெ ரிக்கா நுழைய முற்படும் என்று அமெரிக்க மக்கள் கொண் டுள்ள நம்பிக்கையை ஏனைய மக்களுடன் இணைந்து நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

அநீதியையும், பகைமையையும் தோற்கடித்துத் தமது உரிமைகளை வென்றெடுத்து உலக சமூகத்தில் தமக்கான இடத்தை ஒடுக்கப்பட்ட மக்களும், சமூகங்களும் பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கையையும், முன்னுதாரணத்தையும் உங்களின் தனிப்பட்ட வெற்றி ஏற்படுத்தியுள்ளது.

உலக அரங்கில் ஏற்பட்டுள்ள தீர்வு காண முடியாதவை போன்று தென்படும் அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான புதுமையான தீர்வுகளை தோற்றுவிப்பதற்கான வாய்ப்புக் களை உங்களின் தனித்துவமான தரிசனம் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

சகல விடயங்களிலும் உங்களின் வெற்றிக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

உங்கள் உண்மையுள்ள
வே.பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்"



டனி டேவிஸ் ப.நடேசனுடன்

ஒபாமாவிற்கான தேசியத் தலைவரின் இக்கடிதத்தை டனி டேவிஸ் அவர்களிடம் நேரடியாகக் கையளிக்குமாறு பணித்தே இதனை உருத்திரகுமாரனின் உதவியாளரிடம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அனுப்பி வைத்தார். ஆனால் இக்கடிதம் உருத்திரகுமாரனின் உதவியாளரால் டனி டேவிஸ் அவர்களிடம் கையளிக்கப்பட்டதையோ அன்றி அது ஒபாமாவை சென்றடைந்ததையோ உறுதிப் படுத்தும் மாற்றுப் பொறிமுறைகள் எவையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை.

இக்கடிதம் ஒபாமாவின் மேசையை சென்றடைந்ததா அல்லது உருத்திரகுமாரனின் கழிவுக் கூடைக்குள் வீசப் பட்டதா என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியாது. ஆனால் இக்கடிதத்திற்கான பதில் எதுவும் ஒபாமாவின் செயலகத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கவில்லை என்பதை உறுதிசெய்யும் சாட்சிகள் எம்மிடம் உள்ளனர்.

**ஒபாமாவுடன் உருத்திரகுமாரன் குழுவினருக்கு நேரடியாக எவ்வித தொடர்புகளும் இல்லை என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்து கொண்டிருந்தாலும்கூட, அவருக்கு நெருக்கமான அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் டனி டேவிஸ் அவர்களுடன் உருத்திரகுமாரன் குழுவினர் தொடர்புகளைப் பேணி வந்தமை பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிந்திருந்தனர்.**

(17ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc 75010 Paris
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis 75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

Bail விற்பனைக்கு

Metro 4 : Marcadet - Poissonniers இற்கு அருகாமையில் rue labat 75018 paris என்னும் முகவரியில் 130 m விஸ்தீரணமுள்ள மேல்தளமும் 170m sous-sol விஸ்தீரணமுள்ள கடை Bail விற்பனைக்கு உள்ளது

வாடகை 3200 € CC

தொடர்பு 07 51 01 59 63

3S VDR

Tamil, Hindi video
Cartes Teléphoniques



21. Bd de la Chapelle
75010 Paris

01 42 09 87 70 / 06 17 06 76 33

La Courneuve Cash & Carry

உங்கள் மளிகைத் தேவைகள் அனைத்திற்கும்

1, rue des Prevoyants
93120 La Courneuve

Tél.: 06 60 20 61 47

VIJAI COIFFURE

ஆண்கள் சிறுவர்களுக்கான சிகையலங்காம் மற்றும்

ஆண்களுக்கான முக அலங்காரம் செய்யப்படும்



51, rue Louis Blanc,
75010 Paris
Tel.: 09 54 28 63 50
Ⓜ La chapelle, Louis blanc, Gare du Nord

சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்

தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard, 75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

MINI MARCHÉ

பலசரக்கு வாணிபம்

4, rue Ernest Prevost
93330 Aubervilliers

01 49 37 15 97

NIPPON COIFFEUR

La Courneuve இல் அனுபவமிக்க சிகை அலங்கரிப்பாளர்களின் கைவண்ணத்தில்



93120 LA COURNEUVE M° La Courneuve

தன இலட்சுமி மஹால்
THANAA LAKSHMI MAHAL
Textiles & Jeweleries



ஒடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறுகியகால இடைவெளியில் தரமாகச் செய்து கொடுக்கப்படும்
பொன்னுருக்கல், தோடு குத்துதல், சிறப்பாக நடாத்தப்படும்
நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

Tél.: 01 48 36 40 75 - Port 06 50 17 51 91 - Fax: 01 79 64 12 61

122, Av P.V. Couturier - 93120 La Courneuve

Garage Mahendran

• வாகனங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும்,
திருத்த வேலைகள்,
• Carosserie வேலைகள்,
மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.
• வாகனங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தரமான முறையில் கழுவி துப்பரவு செய்து தரப்படும்.



85-87, rue de Strasbourg, 93200 St Denis
Tél.: 01 48 21 93 31 / 06 17 91 47 66
Hôpital Delafontaine க்கு அருகாமையில்
Lundi au Samedi 8h30 à 19h

# ASCES

22 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

E-mail : asces@free.fr Tél : 06 68 12 57 19

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

DILF, DELF, TCE
Nationality பெறுவதற்கான மொழிப்பரீட்சைக்குத் தயார் செய்யும் வகுப்புகள்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre
93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crepin 93000 Bobigny
PARIS
3, place de joinville 75019 Paris M° Crimée
DRANCY église Saint Louis
33, rue George Marie 93700 Drancy -Gare அருகில்

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்பு
10.03.2012 சனி - ஞாயிறு 1.30 மணி
11.03.2012 ஞாயிறு 10.30 மணி (ஒருநாள் வகுப்பு La Courneuve )
12.03.2012 திங்கள் 10.30 மணி (ஒருநாள் வகுப்பு Paris)
03.04.2012 செவ்வாய் - புதன் பி.ப 2 மணி
08.03.2012 வியாழன் - வெள்ளி 11 மணி (Bobigny)

Cambridge University பரீட்சைக்கான வகுப்புகள்
(Starters, Movers, Flyers, Ket, Pet,Fle)

கணனி வகுப்பு Photoshop 18.03.2012 ஞாயிறு 11 மணி
windows,office,hardware,web design
17.03.2012 சனி 11 மணி PHOTOSHOP – VIDEO EDITING (AVID)

அண்மையில் இலங்கையிலிருந்து வந்த மாணவர்களுக்கான விசேட பிரஞ்சு வகுப்புகள் ஏழு நாட்களும்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ, நடனம், சங்கீதம் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன் கிட்டார் வகுப்புகள்
தையல் icing, hairstyle, facial வகுப்புகள் ஆரம்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சிறீலங்கா மகிந்த ராஜபக்ச தரப்பினர் தாங்கள் நடத்திய யுத்தத்திற்கு எவ்வித வெளிநாட்டு உதவியும் கிடைக்கவில்லையெனக் கூறிவருவதை லங்காநியூஸ்வெப் தளம் மறுத்துள்ளதுடன், அது தொடர்பான ஆதாரங்களுடனான கட்டுரை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதனை எமது வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

# அமெரிக்காவின் உதவியுடன் சிறீலங்கா வெற்றிகொண்ட போர்!

2009ம் ஆண்டு மே மாதம் சிறீலங்கா இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து அரசாங்கம் பெற்ற வெற்றிக்கு, எந்தவொரு உலக நாடும் உதவி செய்யவில்லையென ராஜபக்ச ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். அத்துடன், யுத்த வெற்றி உள்நாட்டவர்களின் முழுமையான அர்ப்பணிப்புடன் பெறப்பட்டதாகவே வெளிக்காட்ட முயற்சிக்கின்றனர். எனினும், யுத்தத்தின் இறுதியில் அமெரிக்கப் பாதுகாப்புத் தரப்பு எவ்வகையிலான தொடர்புகளை சிறீலங்காவுடன் பேணிவந்தது என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.



7th Fleet-USS Blue Ridge

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அந்நாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் ஸ்தாபிக்கப்பட்ட 'மென் ஸ்டீம்' அணியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தத் தகவல்களை எமது இணையத்தளத்திற்கு (lankanewsweb) வழங்கினார். விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அமெரிக்காவில் கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்க பாதுகாப்புப் பிரிவினரால் விசேட அதிரடிப் படைப் ( Task Force) பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த மங்கள சமரவீர, அந்நாள் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொண்டலீசா ரைஸிடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படையணியின் ஒரு பிரிவு மறைமுக செயற்பாடுகளில் (Under Cover Agents) ஈடுபட்டு வந்தனர். விமானங்களைத் தாக்கியழிக்கும் ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வதற்காக கனடாவிலிருந்து தரைவழியாக இரகசியமாக நியூயோர்க் வந்திருந்த, விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை இந்தப் படைப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

இந்தக் கைது 2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பின்னர் அவர்கள் வசமிருந்த சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. அந்நாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்க அரசாங்கத்துடன் மேற்கொண்டிருந்த நெருக்கமான உறவுகளுக்கமையவே அமெரிக்க பாதுகாப்புத் தரப்பு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக, விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோகத்தைத் தடுப்பதற்கு சிறீலங்கா அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இதில் ஒருகட்டமாக சிறீலங்கா அரசு விடுத்த வேண்டுகோளுக்கமைய 'US-Hawai Pacific Fleet படையணியின் 7th Fleet-USS Blue Ridge கப்பல் இந்து சமுத்திரத்தில் நங்கூரமிட்டிருந்தது. இந்தக் கப்பலிலிருந்து விடுதலைப் புலிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டதுடன், இதிலிருந்து பெறப்பட்ட செய்மதிப் புகைப்படங்கள் அமெரிக்க தூதரகத்தின் ஊடாக சிறீலங்கா அரசாங்கப் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் உதவியுடனேயே விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான பல கப்பல்கள் தாக்கியழிக்கப்பட்டன. அத்துடன், புலிகளுக்கான ஆயுத விநியோகமும் பெருமளவில் தடுத்து நிறுத்தப்பட்டது. அமெரிக்காவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட செய்மதிப் புகைப்படங்களை (Satalite Images) ஆராய்ந்து செயல்படுத்தக் கூடிய அதிகாரியொருவர் அப்போது சிறீலங்கா பாதுகாப்புத் தரப்பில் இருக்கவில்லை. இதனால், உடனடியாக செயற்பட்ட அமெரிக்கத் தூதரகம், சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் கெளும் மத்துமகே என்ற அதிகாரிக்கு இதுதொடர்பான புலமைப்பரிசில் ஒன்றை 'கொலராடோ மிலிடரி அகடமி' இல் பெற்றுக்கொடுத்தது.

இதனையடுத்து 700 கடல்மைல் தொலைவிலுள்ள ஆழ்கடலில் நடைபெற்றுவந்த விடுதலைப் புலிகளின் கப்பல் போக்குவரத்தை சிறீலங்கா இராணுவத்தினரால் துல்லியமாக கணிக்க முடிந்துள்ளது. அத்துடன், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கடலில் முறியடிக்கத் தேவையான நடவடிக்கைகள் இலகுவாக திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் புலிகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் இராணுவம், சிறீலங்காக் கடற்படைக்கு வழங்கியுள்ளது. இதனை செயற்படுத்துவதற்கான திட்டங்களையும், வியூகங்களையும் வகுப்பதற்குத் தேவையான பயிற்சிகளையும் அமெரிக்காவே வழங்கியுள்ளது. இதற்காக அந்நாள் கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் வசந்த கரண்ணாகொட உள்ளிட்ட குழுவினருக்கு அமெரிக்கா ஒரு மாத கால விசேட பயிற்சியொன்றை வழங்கியுள்ளது.

இந்த விசேட பயிற்சிகளின் பின்னர் 700 கடல்மைல் தொலைவில் புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்கவும், அதனை முறியடிப்பதற்கும் தேவையான உதவிகளை இந்து சமுத்திரத்தில் நங்கூரமிட்டிருந்த அமெரிக்காவின் 7th Fleet-USS Blue Ridge கப்பல் முழுமையாக சிறீலங்காக் கடற்படைக்கு வழங்கியிருந்தது. சிறீலங்கா கடற்படையினர் 2008 ஆம் ஆண்டு நம்வபர், டிசம்பர் மாத இடைவெளியில், விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான பல ஆயுதக் கப்பல்களை கடலில் தாக்கியழித்திருந்தனர்.



மங்கள சமரவீர, கொண்டலீசா ரைஸ்

இவ்வாறு தாக்கியழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 07, 08 கப்பல்களின் ஆயுதங்கள் அந்த இயக்கத்திற்குக் கிடைத்திருந்தால் இறுதிக் கட்ட யுத்தத்தின் விளைவுகள் பெரும்பாலும் வேறுவிதமாக இருந்திருக்கும் என எமது இணையத்தளத்திற்கு தகவல் தந்த குறித்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

இதனைத்தவிர, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக இஸ்ரேல், பிரித்தானியா ஆகிய நாடுகள் வழங்கிய உதவிகள் குறித்த விரிவான தகவல்களை இனிவரும் காலத்தில் வெளியிட 'மேன் ஸ்ரிம்' அணியில் இருந்த சிலர் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நாடுகள் வழங்கிய உதவிகளுக்கு தமது அணியின் தலைவரான ஜெனரல் சரத் பொன்சேக்கா தொடர்ச்சியாக நன்றி தெரிவித்து வந்தார். இந்த நாடுகள் உதவி வழங்கவில்லையெனில் யுத்தத்தை வெற்றி கொண்டது சாத்தியமாகியிருக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றை மறந்துபோன தற்போதைய மகிந்த ராஜபக்ச நிர்வாகம், பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான பயிற்சிகளை சிறீலங்கா இராணுவத்திடம், வந்து பெற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுப்பது நகைப்பிற்குரியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், குறித்த நாடுகளுடன் முரண்பட்டு, நெருக்கடியான நிலையை மகிந்த ராஜபக்ச ஏற்படுத்திக்கொண்டுள்ளமை எதிர்காலத்தில் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

நன்றி – lankanewsweb

**தாக்கியழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 07, 08 கப்பல்களின் ஆயுதங்கள் அந்த இயக்கத்திற்குக் கிடைத்திருந்தால் இறுதிக் கட்ட யுத்தத்தின் விளைவுகள் பெரும்பாலும் வேறுவிதமாக இருந்திருக்கும் என எமது இணையத்தளத்திற்கு தகவல் தந்த குறித்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாழ்ந்த மண்ணையே மீளக் கேட்கின்றோம் சர்வதேசத்திற்கு ஏன் இது புரியவில்லை?

தாயகத்தில் இருந்து வீரமணி

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகின் கண்களுக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட காலங்கள் சென்றுள்ள போதிலும் தற்போதுதான் எமது போராட்டம் உலகின் பார்வையில் நியாயம் மிக்கதாக மாறியுள்ளது. இந்த நியாயத் தன்மையை சர்வதேசம் எவ்வாறு பயன்படுத்த போகின்றது என்பதே தமிழ் மக்களின் கேள்வியாக உள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமானதில் இருந்து கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறுதியாக இடம்பெற்ற வன்னி யுத்தத்தில் மட்டும் ஒரு இலட்சம் வரையான தமிழ் மக்களை எமது தாயகம் இழந்திருக்கின்றது. இந்த இழப்பினை நாம் வெறும் வார்த்தையாக எடுத்துக்கொள்ள முடியாது. எமது இனத்தை அழிப்பதற்கான நீண்டகால முயற்சியாகவே தமிழர் தாயகத்தில் இந்த அழிவு அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

ஒரு இனமே அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்ற போது கண்டும் காணாதது போல இருந்த மேற்குலகம் இன்று தமிழர்களுக்கு ஆதரவான தோற்றப்பாட்டுடன் நடந்துகொள்ள முற்பட்டிருக்கின்றது. நடந்துகொண்டிருக்கின்றது. அமெரிக்கா இன்றுவரை சர்வ வல்லமை பொருந்திய நாடாகவே கணிக்கப்படுகின்றது. தனது செயற்பாடுகள் காரணமாக 'சர்வதேச பொலிஸ்காரன்' என்ற பட்டப் பெயரையும் அமெரிக்கா தனக்குத தானே சூட்டியிருக்கின்றது. உலக உருண்டையில் உயிரினங்கள் இருக்கும் வரை உலகிற்கு தானே மன்னன் என்ற கௌரவப் பெயருடனேயே அமெரிக்கா வலம் வரத் துடிக்கின்றது.



இப்படியான ஒரு நாடு இருக்க வேண்டியதும் அவசியமானதுதான். இல்லாவிடில் உலகத்தில் பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுவிடும். ஆனால், இந்த நாட்டினால் தமிழ் மக்கள் என்ன பயனை அடைந்தார்கள்? என்ன பயனை அடையப்போகிறார்கள்? என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளன.

ஈழத்தில் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை கொன்றொழித்த போது மறைமுகமாகவும் இராஜதந்திர ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பல்வேறு உதவிகளை வழங்கிய மேற்குலகம் இன்று சிறீலங்கா அரசு குற்றம் செய்துவிட்டதாகவும் அரசாங்கத்தை தண்டிப்பது போலவும் ஐநா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளன.

ஈழத்தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேசத்தில் வாழுகின்ற மக்களும் ஏனைய மக்களும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுமா என்ற பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். இந்த எதிர்பார்ப்புகள் வீண்போகாத வகையில் 9 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 24 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் 15 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராகவும் வாக்களித்துள்ளன. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாண மக்கள் என்றுமில்லாத பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். ஆனால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த மக்கள் மனதில் பெரும் ஏமாற்றத்தினையே அவதானிக்க முடிகின்றது. இந்த ஏமாற்றம் பல உயர் கல்விமான்கள் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

'இலங்கையின் பகீரதப் பிரயத்தனம் மிக்க இராஜதந்திர முயற்சிகளை மீறியும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. ஆனால் பலவீனமான தீர்மானமாக உள்ளமை எங்களை மனவருத்தமடைய வைத்துள்ளது' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

'அமெரிக்காவும் இந்தியாவும் சேர்ந்து எங்களை ஏமாற்றிவிட்டன, இந்தத் தீர்மானத்தினால் எதனையும் சாதித்து விட முடியாது ' என்று யாழ்ப்பாணத்தின் புறநகர் கிரமத்தில் வசிக்கும் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் 'இந்தத் தீர்மானம் இலங்கையை நேரடியாகப் பாதிக்கும் என்று நாம் நம்பவில்லை, ஆனால? தீர்மானத்தால் தமிழ் மக்கள் நன்மையடைவார்களாயின் அதனை நாம் வரவேற்போம். போரினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த தமிழ் மக்களின் வேதனைகளும் விம்மல்களும் இன்றுவரை எம் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன, இதற்குரிய தீர்வினை வழங்க வேண்டியது சர்வதேசத்தின் கடமை' என்று யாழ் போதனா வைத்தியசாலையின் சிரேஸ்ர வைத்திய அதிகாரி ஒருவர் கருத்துக் கூறினார்.

அமெரிக்காவின் தீர்மானம் குறித்து கல்விமான்களும் பொதுமக்களும் ஏமாற்றம் வெளியிட்டுள்ளமைக்கு காரணம் இல்லாமல் இல்லை, சிறீலங்கா அரசாங்கமும் அதன் படைத்தரப்புகள் செய்த அட்டூழியங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள். உலகிலே தடைசெய்யப்பட்ட நவீனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி சிறீலங்கா அரசு கொடூர தாக்குதல் நடத்திய போது கொத்துக் கொத்தாக தமிழ் மக்கள் கருகி மாண்டதை நேர்மை, நீதியான எந்தவொரு மனிதர்களும் மறக்கவே மறைக்கவோ மாட்டார்கள்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் 5 இலட்சம் மக்கள் வாழ்ந்த போதிலும் வெறும் 60 ஆயிரம் வரையிலான மக்களே அங்கு உள்ளதாக அரசாங்கம் கூறியது. ஏனைய மக்களை அப்படியே அழித்தொழிப்பதே அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் நோக்கமாக இருந்தது. ஆனால் தமிழீழ தேசியத் தலைவரினதும் தளபதிகளினதும் தந்திரோபாய நடவடிக்கைகள் காரணமாகவே இறுதி யுத்தத்தில் இலட்சக்கணக்கான பொது மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. தற்போது வன்னியில் வழ்ந்து வருகின்ற மக்களுடன் நேரடியாகச் சென்று உரையாடினால் இந்த உண்மையை அவர்கள் தெரிவிப்பார்கள்.

இது இவ்வாறு இருக்க அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானம் தாக்கவல்லமை உடையது அல்ல என்றே யாழ் குடாநாட்டு மக்களும் வன்னியில் உள்ள மக்களும் கூறுகின்றனர். அரசும் இராணுவமும் இனப்படுகொலை செய்தது, போர் விதிகளை மீறிச் செயற்பட்டது. எனவே சிறீலங்கா அரசாங்கத்தை அமெரிக்கா தீர்மானம் போர்க் குற்றவாளியாக்கும் என்று நம்பி இருந்த இந்த மக்ளுக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கின்றமை தவிர்க்க முடியாதது.

நல்லிணக்க ஆனைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்த வேண்டும் என்பதை மையப்படுத்திய தீர்மானமே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு தயாரித்த அறிக்கையானது படையினருக்கும் அரசாங்கத்திற்கும் சாதகமாக அமைந்திருந்தது. வன்னியில வாழ்ந்த மக்கள் இறுதி நேரத்தில் அங்கு தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக ஒப்புவித்தனர். இவை அனைத்தையும் புறம் தள்ளிய நல்லிணக்க ஆணைக்குழு இராணுவத்தைப் பாதுகாக்கும் அறிக்கை ஒன்றையே இறுதியில் தயாரித்திருந்தது. ஆனால், சர்வதேச நாடுகளைச் சமாளிப்பதாற்காக தமிழ் மக்களுக்கு சாதகமான ஒரு சில விடையங்களை மட்டும் நல்லிணக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தது. ஆயினும் இந்த ஆணைக்குழுவின் அறிக்கையினை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தலைமை நிராகரித்திருந்தது.

இந் நிலையிலேயே அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை வடபுலத் தமிழ் மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளது.

அமெரிக்கத் தீர்மானம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் கருத்துக்கள் கூறியிருக்கின்ற நிலையில், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், பொதுச் செயலாளர் செலவராஜா கஜேந்திரனும் இணைந்து காத்திரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அமெரிக்காவின் தீர்மானத்தால் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஈழத்தில் வாழுகின்ற தமிழ் மக்களின் ஏமாற்றத்துடன் இந்த அறிக்கையும் ஒத்துப் போவதாகவே உள்ளது. தமிழ் மக்களின் இழப்புகளும் துன்பங்களும் எல்லையற்றவை. தமிழர்கள் சிந்திய குருதிக்கும் இழந்த உயிருக்கும் சுதந்திர தமிழீழத்தைத் தவிர வேறு எதுவும் தீர்வாக அமைய மாட்டாது என்பது முடிந்த முடிவாக உள்ளது. அதற்காக தமிழ் மக்கள் இனி ஒரு போராட்டத்தை விரும்பவில்லை, அழிவுகளை விரும்பவில்லை, ஆட்சிமாற்றத்தினை விரும்பவில்லை.

அமெரிக்க உள்ளிட்ட சர்வதேசம் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். ஈழத்தில் வாழுகின்ற தமிழ் மக்கள் இல்லாத ஒன்றை கேட்கவில்லை, தலைவர் பிரபாகரனும், தளபதிகளும், போராளிகளும் ஹிட்லர் போன்று நில ஆக்கிரமிப்புக்களில் ஈடுபடவில்லை. ஈழத் தமிழ் மக்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் எவ்வாறு வாழ்ந்தார்களோ அவ்வாறு வாழ்வதற்கான உரிமைகளையே கேட்டோம். 'முந்தி வந்த இனம் என்ற அந்தஸ்தோடு குந்தி இருக்க ஒரு குடிநிலம் கேட்டோம். இன்றும் அதையே கேட்கிறோம். 'சர்வதேச பொலிஸ்காரனும்' அதன் நேச அணிகளும் இந்தியாவும் இன்றுவரை அதை ஏன் புரிந்து கொள்ளவில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம்பகுதி

- ச.ச.முத்து -


நியூயார்க் மாநா
பிரபாவின் கடிதம்

# கால்களை உறுதியாக வைத்திருந்தால் கைகள் எங்கும் பற்றலாம்

ஒரு விடுதலை இயக்கம் தனது போராட்டத்தை முன்னெடுத்துக்கொண்டுபோகும் பாதையில் அதற்கு முதலில் கரம்கொடுக்ககூடியதும் அதனுடன் பேசக்கூடியதும் உலகின் இன்னொரு திசையில் நடந்துகொண்டிருக்கும் இன்னொரு விடுதலை அமைப்புதான். இவர்களால் புரிந்துகொள்ளக்கூடிய மொழி ஒன்று உண்டு. அதுதான் அடக்குமுறைக்கும் அடிமைத்தனத்துக்கும் எதிரான போராட்டம் என்ற மொழி. ஆனால் வெறுமனே ஒரு விடுதலை அமைப்பு என்ற கடித இலட்சினை மட்டுமே ஒரு விடுதலை இயக்கத்துக்கு நெருக்கமாக மற்றைய விடுதலை அமைப்புகள் வருவதற்கு போதுமானவை அல்ல. தமிழ் புதிய புலிகள் இயக்கத்தையும் அதன் வரலாற்றுப் பாதையில் பெயர் மாற்றம்செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் ஆரம்பித்த தேசியத் தலைவர் இதனை நன்கு புரிந்திருந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்து புதிய போராட்ட அமைப்புகளும் தமிழர் தாயகத்தில் ஏதோ ஒரு ஆயுத எதிர்வினை தோன்றி இருந்ததை தெரிந்திருந்தனர் அந்த 70களின் இறுதியில். சிங்களதேசத்து ஆளும் கட்சியின் தமிழர் பிரதேச பொறுப்பாளர்கள் பகிரங்கமாக அழிக்கப்பட்டதும், சிங்கள அரசபடைகளின் தமிழர் பகுதி மீதான வலையமைப்பு சிதைக்கப்பட்டு அதன் காவல்துறை அதிகாரிகள் அழிக்கப்படுவதும் எல்லோருக்கும் செய்திகளாக இருந்தபோதும், உலகின் விடுதலை அமைப்புகளுக்கும் புரட்சிகர அமைப்புகளுக்கும் அவை வேறுவிதமான சேதிகளாகவும் இன்னொரு தேசத்தின் பிறப்புக்காக யாரோ ஒரு அமைப்பினர் சாகவும் துணிந்து போராடுகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்தியது.

இந்த நேரத்தில் இன்னுமொன்றும் நடந்துவிடுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் 70களின் இறுதியில் தாயகத்தில் நடாத்திய தாக்குதல்களைத் தாமே செய்ததாக வெறும் வாய்மொழி உரிமை கோரல்களை அந்த நேரம் ஐரோப்பாவில் இருந்த சிலர் செய்ததன் ஊடாக விடுதலை அமைப்புகள் சிலவற்றின் தொடர்புகளைப் பெற்றுவிடுகின்றனர்.

போராளிகளை உள்வாங்கிய அந்தத் தருணங்களில் தேசியத் தலைவர் தனது தெரிவுகளாக் ஒவ்வொரு முகாமிலும் ஒவ்வொரு பண்ணையிலும் இருக்கவேண்டிய புத்தகங்களாக விடுதலைப் போராட்ட வரலாற்று புத்தகங்களையே அதிகமாக வாங்கிக் கொடுத்திருந்ததார். இந்த உணர்வு வெறுமனே உலகின் இன்னொரு திசையில் நடந்துகொண்டிருந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை தெரிந்துகொள்வது என்பதற்கு அப்பால் அவர்களுடன் மானசீகமாக ஒன்றிணைவது என்பதுதான்.

ஆரம்பகால விடுதலைப் புலிகளின் இருப்பிடங்கள், பண்ணைகளில் அயர்லாந்து விடுதலைக்கான ஆரம்ப போராளிகளான தான்பிரீன், மைக்கல் கொலின்ஸ் போன்றோரின் வரலாறுகள், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் நவரெட்ணம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட யூதமக்களின் தாயகப் பயண ஆக்கமான 'நமக்கென்றோர் மண்' (எக்சோடஸ்), வீரமிகு வியட்னாம் என்ற வியட்னாமியரின் விடுதலை வரலாறு, சுபாஸ் சந்திரபோசின் வரலாறு என்பன நிச்சயமாக இருந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மற்றைய விடுதலை இயக்கங்களை உற்றுக்கவனித்து அவற்றின் எழுச்சி, வீழ்ச்சி என்பணவற்றை கற்றுக்கொண்டிருந்ததைபோலவே மற்றைய உலகத்து

இதனைத் தடுப்பதற்காகவும் உண்மையான அர்ப்பணிப்புடன் இந்தத் தாக்குதல்களை நடாத்திய அமைப்புடன் தொடர்புகளை உலக விடுதலை இயக்கங்கள் தொடரவேண்டும் என்ற காரணத்துக்காவுமே முதன்முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இலட்சினையுடனான உரிமைகோரல் கடிதம் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வானது வேறுயாரும் உலக விடுதலை இயக்கங்களுடன் தொடர்புகளை பேணுவதைத் தடுப்பதற்காக என்பதைவிட விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு உலக விடுதலை இயக்கங்களுக்கு தன்னை வெளிப்படுத்தியதாகவே வரலாறு பதிகிறது.

இதன் இரண்டாம் கட்டமாக விடுதலைப் புலிகள் தமது கொள்கைளை தமது போராட்டப் பாதை பற்றிய விளக்கத்தைத் தெரிவித்தாகவேண்டிய ஒரு கட்டம் வருகின்றது. வெறும் பத்து அழித்தொழிப்புகளை மட்டும் செய்தவுடன் ஒரு அமைப்புடன் உலக விடுதலை இயக்கங்கள் கரம் குலுக்கப் போவது இல்லை என்ற யதார்த்தம் விடுதலைப் புலிகளுக்கு தெரிந்திருந்தது.

விடுதலைப் புலிகள் தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்தில் நின்று அந்த நேரத்தை உலக அமைப்பை கருத்தில் கொண்டு இதனைத் திரும்பிப் பார்க்கவேண்டி இருக்கின்றது. அறுபதுகளின் நடுப்பகுதியும், அறுபதுகளின் இறுதியும் ஆபிரிக்காவில் இருண்டிருந்த, வெள்ளை இனத்தின் காலனிகளாக இருந்த தேசங்கள் விடுதலையான பொழுது அவை. புதிதாக உருவான தேசங்கள் பல அந்த நேரம் உலகம் முழுதும் இருந்திருந்தன.

(15ம் பக்கம் பார்க்க)

## ஒரே நாடு! எப்படிச் சாத்தியம்?



அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணிக்கக்கோரி சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் சிங்களவர்களால் தொடங்கப்பட்டுள்ள தீவிர பிரச்சாரத்தில்...



சிறிலங்காப் பொருட்களை அமெரிக்காவில் புறக்கணிக்கக்கோரி தமிழர்கள் அமெரிக்காவில் நடத்திய போராட்டத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்தம் 300 MB இணையம் இலவசம்

# Lycamobile

Appelez le monde pour moins cher

# 60 க்கும் மேற்பட்ட சர்வதேச நாடுகளுக்கான இலவச அழைப்புகள்..!

இணைப்புக் கட்டணம் இல்லை.!

0 ct/நிமிடம்*

இந்தியா
இலங்கை
மலேசியா
ஐரோப்பா
கனடா
அமெரிக்கா
சிங்கப்பூர்
குவைத்
சவூதி அரேபியா

*30€ வுக்கு மீள் நிரப்பும் பொழுது 600 நிமிடம் அல்லது குறுந்தகவல் (SMS) இலவசம்

| பிரான்ஸ் | வீட்டுத் தொலைபேசி | கைத் தொலைபேசி | உள்நாட்டு குறுந்தகவல் |
|---|---|---|---|
| | 0 Ct/நிமிடம்* | 12 Ct/நிமிடம் | 9 Ct/(SMS) |

லில் இருந்து

Lycamobile 0* Ct Lycamobile

*அனைத்து கட்டணங்களும் நிமிட கணக்கீட்டில் கணக்கிடப்படும். இலவச அழைப்புகள் பிரான்ஸிலிருந்து அல்ஜீரியா, சவூதி அரேபியா, பஹ்ரைன், வங்காளதேசம், கனடா, சீனா, கொலம்பியா, கோடே டிவோர், எகிப்து, அமெரிக்கா, ஐரோப்பா, பிரான்ஸ், ஹொங்கொங், இந்தியா, இந்தொனேசியா, ஈரான், ஈராக், ஜோர்டான், குவைத், லாவோஸ், லெபனான், மலேசியா, மொராக்கோ, மெக்சிகோ, நைஜீரியா, பாகிஸ்தான், போலாந்து, றொமேனியா, ரஸ்யா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, தாய்லாந்து, துருக்கி, வியட்நாம் வீட்டுத்தொலைபேசிக்கும் மற்றும் எல்லா நாடுகளிலுள்ள லைக்காமொபைல்களுக்கும் பொருந்தும். இச்சலுகை மீள்நிரப்பிய நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இலவச அழைப்புகளும், குறுந்தகவல் சேவையும் பாவனையோ, காலாவதியோ முடிந்தால் லைக்காமொபைலில் வழமையான கட்டணம் அறவிடப்படும். *சலுகை கட்டணங்கள் கால வரையறைக்குட்பட்டவை. Lycamobile SARL 47 boulevard de Courcelles, 75008 Paris; 528 332 505 RCS Paris.
ஒவ்வொரு சலுகையல்லாத அழைப்புக்களுக்கும் இணைப்புக்கட்டணமாக €0.09 அறவிடப்படும்.

Lycamobile மீள் நிரப்பக்கூடிய இடங்கள்

01 77 72 23 22

www.lycamobile.fr


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு முறையும் நோயற்ற வாழ்வும்

'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

## முருங்கையின் மகத்துவம்!

- வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்காயை உணவாக உபயோகித்து வந்தால், இரத்தமும் சிறுநீரும் சுத்திகரிக்கப்படும்.
- முருங்கை இலையில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்துகள் இருக்கின்றன. இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் இரத்தசோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். அதோடு, பல் கெட்டிப்படும். தோல் நோய்கள் நீங்கும்.




- முருங்கை விதையைக் கூட்டு செய்து சாப்பிடலாம். இது மூளைக்கு நல்ல பலத்தை தரும். மேலும், தாது விருத்தியும் உண்டாகும்.
- முருங்கை இலைச்சாறுடன் பால் கலந்து குழந்தைகளுக்கு தந்தால் இரத்தம் சுத்தமாகும். எலும்புகள் வலுவாகும். கர்ப்பிணிப் பெண்களும் இதை உட்கொண்டு வரலாம்.
- முருங்கை இலை காம்புகளை நறுக்கி, மிளகு ரசம் வைத்து, சாப்பாட்டுடன் சேர்த்து உட்கொண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் நீங்கும். அதேவேளையில், அது சிறுநீரைப் பெருக்கும்.

## பிரசவத்திற்குப் பிறகு...

பிரசவத்திற்குப் பிறகு பெண்களின் வயிறு பெரிதாகக் காணப்படும். பிள்ளைப் பெற்றால் இப்படித்தான் ஆகும்... என்று அவர்களுக்கு அறிவுரை சொல்லாமல், சில உடற்பயிற்சிகளை செய்யச் சொன்னால் அந்த பிரச்சினையை எளிதில் போக்கிவிடலாம்.

அதற்கு என்ன செய்யலாம்?



- மல்லாந்து படுத்துக் கொண்டு முதலில் வலது காலை மட்டும் மேலே தூக்க வேண்டும். பிறகு இடது காலை தூக்க வேண்டும். அதன் பிறகு இரண்டு கால்களையும் மேலே உயர்த்த வேண்டும். இதுபோல் தினமும் பத்து முறை செய்யலாம். இப்படிச் செய்வதால் உப்பிக் காணப்படும் வயிற்றின் உப்புசம் குறையும்.
- நின்றுக் கொண்டு, இரண்டு கை விரல்களூம் கால் விரல்களை தொடும் அளவுக்கு தினமும் பத்து முறை குனியலாம்.
- காதைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது போல் பத்து முறை கீழே உட்கார்ந்து எழுந்திருக்கலாம்.
- நாற்காலியில் அமர்ந்து கொண்டு சமையல் வேலைகளை செய்யாமல் கீழே உட்கார்ந்து வேலை செய்வது நல்லது.
- குழந்தை பிறந்த ஐந்து மாதத்திற்குப் பிறகு தினமும் நடைப்பயிற்சி செய்து வந்தாலும் வயிற்று உப்புசம் சரியாகும்.

## இது... விருது வழங்கும் நேரம்!



இப்போதெல்லாம் சிலருடைய அறிக்கைகளையும் பேச்சுக்களையும் கடிதங்களையும், ஆய்வுகளையும், உரைகளையும் படிக்கும் எமது மக்களுக்கு இவற்றை நினைத்து அழுவதா, சிரிப்பதா, கோபப்படுவதா என்று ஏதாவது ஒரு உணர்வு வந்துசேர்கிறது. இத்தகைய அறிக்கை மன்னர்களுக்கும், ஆய்வுத் திலகங்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஏதாவது நம்மால் முயன்றது செய்யவேண்டும் என்றால் அவர்கள் மிகமிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் விருதுகளை வழங்குவதுதான்.

**'அப்பவே சொன்னேன்' விருது**

இந்த விருதுக்கு உரியவராக சத்தியசீலன் அவர்களை ஏகமனதாக தெரிவு செய்கின்றோம். இப்பவெல்லாம் அவர் தோன்றும் தொலைக்காட்சிபேட்டிகளிலும், கூட்டங்களிலும்,பொஸ்தக வெளியீடுகளிலும் அவர் திரும்பதிரும்ப சொல்லும் ஒரே விடயம் 'நான் அப்பவே சொன்னேன், ஆயுதப்போராட்டம் சரிவராது என்று' என்பதுதான். கடந்த முப்பதுஆண்டுகளாக ஒருமுறைகூட வெளிப்படையாக இப்படி சொல்லாமல் இப்போதுமட்டும் இதனை சொல்லும் இவர் இந்த விருதுக்கு முழுதாக பொருத்தமானவர்.

**'சிங்களத்தின் குரல்' விருது**

வேறுயாருக்கு சுமந்திரனுக்குத்தான்! இவரைவிட இந்த விருது பெறுவதற்கு தகுதி இவர் அளவுக்கு இருக்குமா தெரியவில்லை. கோத்தபாயா பேசவேண்டியதையும், விமல் வீரவன்ச சொல்ல வேண்டியதையும், சிகல உறுமய பேசவேண்டியதையும் அண்மைக்காலமாக இவரின் குரல்வழியே கேட்பதால் இவருக்கே 'சிங்களத்தின் குரல்' என்ற அதியுயர் விருது பொருத்தமானது என்று கருதுகின்றோம்.

**'கொம்ரேட்' விருது**

இன்றும் தொடர்ந்து அறுபதுவருசமாக சொன்னதையே வாய்ப்பாடுபோல 'சிங்கள உழைக்கும் வர்க்கமும் தமிழ் உழைக்கும் வர்க்கமும் ஒன்று சேரவேணும்'' என்று சிவப்பு எழுத்தில் எழுதிவரும் சளைக்காத செந்தோழர்கள் அனைவருக்கும் இந்த 'கொம்ரேட்' விருது பெருமையுடன் வழங்கப்படுகிறது.

**'எல்லாம் கடிதத்திலே முன்னமே எழுதிட்டேன்' விருது**

ஜெனீவா தீர்மானம் வெற்றிபெறும் வரை பதுங்கி இருந்துவிட்டு, வென்றவுடன் நான் அப்பவே எல்லா நாடுகளின் பிரதிகளுக்கும் கடிதம் மூலம், விளங்கப்படுத்திவிட்டேன் என்று அறிக்கைவிட்டிருக்கும் சம்பந்தர் அவர்களுக்காகவே இந்த விருது உருவாக்கப்பட்டுள்ளது. அவருக்காகவே உருவாக்கப்பட்ட விருதை அவருக்கே அளிப்பதுதான் நியாயம்.

- தொகுப்பு : ஏகன்

## கால்களை உறுதியாக....

புதிதாக சுதந்திரமான தேசங்களின் தலைவர்களாக அந்த அந்த தேசங்களின் விடுதலைக்கு போராடிய அமைப்புகளின் தலைவர்களே இருந்தார்கள். அதனால் புதிதாக விடுதலைக்கு போராடும் மக்களின் வலியும் அவர்களின் ஆன்மமும் அந்த புதிய தேச தலைவர்களால் ஆழமாக புரியப்பட்டும் உணரப்பட்டும் இருந்தன. இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், விடுதலைக்கு போராடும் அமைப்புகளை முறியடிக்கும் ஆக்கிரமிப்பாளர்களுடன் கைகோர்த்து நின்ற முதலாளித்துவ – ஏகாதிபத்திய முகாம் ஒரு பக்கம். முதலாளித்துவ – ஏகாதிபத்திய எதிர்ப்பின் ஒரு வடிவமாக விடுதலைப் போராட்டங்களை வளர்த்தெடுத்த நாடுகள் ஒரு முகாம்.

இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் கொள்கை எதுவாக இருந்திருக்க முடியும். உலக விடுதலை இயக்கங்கள் அனைத்தும் கொண்டிருந்த அதே புரட்சிகர சமதர்ம தேசம் ஒன்றை எமக்கே உரிய சுயநிர்ணய உரிமையின்படி அமைத்துக்கொள்வதே என்பதாக இருந்தது. விடுதலைப் புலிகள் வெளியிட்ட 'சோசலிச தமிழீழம் நோக்கி' என்பது விடுதலைப் புலிகள் தாம் யார் என்பதையும் எத்தகைய புரட்சிகர தத்துவத்தை வரித்துக்கொண்டு விடுதலைக்கு போராடுகின்றோம் என்பதையும் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தியதுடன் நின்றுவிடாமல் இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு புலம்பெயர் தேசங்களில் 79ல் வெளியிட்டதன் மூலம் மற்றைய தேசத்து உலக விடுதலை இயக்கங்களுடன் ஒரே பதாகையின் கீழே நிற்க முன்வந்தனர்.

இவைகள் எல்லாமே விடுதலைப் புலிகள் அமைப்பு உலக விடுதலை இயக்கங்களுடன் ஒன்றிணைந்து நிற்க விரும்புவதற்கான சமிஞ்ஞைகளே. இதன்மூலம் விடுதலைப் புலிகளையும் அவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் புரிந்துகொண்டு விடுதலைப் புலிகளுடன் கரம்கோர்த்த விடுதலை இயக்கங்கள் ஏராளம்.

விடுதலைப் புலிகள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதனை மற்றயவர்கள் போல வெறுமனே வாய்ச்சொல்லில் சொல்வதுடன் நின்றுவிடாமல், உளச்சுத்தியுடன் தொடர்ந்தனர். உதாரணத்துக்கு, 1984ல் அமெரிக்காவில் வசித்த மருத்துவரான பஞ்சாட்சரம் என்பவர் தமிழீழ விடுதலை அமைப்புகள் பங்குகொள்ளும் மாநாடு ஒன்றை அமெரிக்காவில் நடாத்தினார்.

அந்த மாநாட்டுக்கு வரும்படி விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அழைப்பு அனுப்பட்டது. அதற்கு தேசியத் தலைவர் எழுதிய கடிதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்'ல் யூலை மாதம் 1984ல் வெளியிடப்பட்டது. அதில் மிகவும் தெளிவாகவே அமெரிக்க ஏகாதி பத்தியத்தையும் அதன் சிஐஏ சிலந்திவலை பற்றியும் தலைவர் விபரித்து எழுதி, அத்தகைய இடத்தில் நடைபெறும் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வரமுடியாது எனவும் தெரிவித்து இருந்தார். இந்த கடிதமும் அந்த நேரத்தில் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

இந்த கடிதம் பகிரங்கமாக வெளியிடப்படதற்கு பின்னாலும் உலக விடுதலை இயக்கங்களுடன் ஒரே அணியில் ஒரே முகாமாக நின்று போராடும் அவாவே இருந்தது. இவற்றுக்குள்ளாக கிடைத்த தொடர்புகளும் உதவிகளும் பற்றி இந்த நேரத்தில் விபரமாக பதிவது சாத்தியமற்று இருக்கலாம். ஆனால் விடுதலைக்கு போராடிய ஒரு அமைப்பு உலக விடுதலை அமைப்புகளுடன் தொடர்புகளை பேணாமல் விட்டுவிட்டது என்று போகும் போக்கில் அவதூறு செய்பவர்களுக்கு ஒன்று எதுவுமே திருப்தி தரமுடியாது. இந்த விடுதலை இயக்கத்தின் தலைமையும் அதன் முன்னணி தளபதிகளும் எப்போதும் இதனை நோக்கியே நின்றனர். நடக்கமுடியாத, ஊன்றுகோலுடன் ஒற்றை காலுடன் தமிழீழ விடுதலைக்காக நாடுநாடாக அலைந்து திரிந்த கிட்டு என்ற விடுதலைப் புலி வீரன், கண்டம் கடந்து மொழி தெரியாத ஒரு தேசமான மெக்சிக்கோவில் போய்நின்று கொண்டு 90களின் ஆரம்பத்தில் லத்தீன் அமெரிக்க புரட்சி அமைப்புகளுடன் தொடர்பில் நின்றானே அது ஒன்றுபோதும் விடுதலைப் புலிகள் எப்படியான தொடர்புகளை மற்றைய உலக விடுதலை அமைப்புகளுடன் மேற்கொள்ள முயன்றார்கள், பெற்றார்கள் என்பதை காட்டும்.

இன்றைக்கும் புலம்பெயர் தேசங்களில் தங்கள் தங்கள் தாயகத்தின் விடுதலையை நெஞ்சில் சுமந்தபடி திரியும் ஒரு குர்தீஸ்காரனோ, ஒரு பாலஸ்தீனனோ, ஒரு ஆபிரிக்கனோ, யாரோ ஒரு இலத்தீன் அமெரிக்கனோ, அல்லது ஒரு காஸ்மீரியோ யாராக இருந்தாலும் எப்போ அவர்கள் மீண்டும் வருவார்கள் என்று கேட்கிறார்களே, அதுதான் விடுதலைப் புலிகள் உலக விடுதலை அமைப்புகளுடன் வைத்த உணர்வு ரீதியான தொடர்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KABISHA IMMOBILIER**

வீடு வாங்குதல், விற்றல், வாடகை, மற்றும் கடன் வசதிகளும்

பொ. கண்ணதாசன்

அலுவலக நிர்வாகி

122, Avenue du Maréchal Leclerc - 93330 Neuilly sur Marne
Tél.: 01 43 81 99 46 - Fax: 09 70 62 70 36
email: kannathasan-kabishaimmobilier@hotmail.fr
www.kabishaimmobilier.com

FNAIM

**DRANCY** மக்களின் நன்மதிப்பைப்பெற்ற சிகையலங்கார நிலையம்




20 rue Roger Salengro, 93700 Drancy திரைசெரி பப்பிளிக்கு முன்னால்
Bus : 146/148 Arrêt : Georges Ducerf Tel : 06 66 66 06 13

**NSV CASH & CARRY**
**ALIMENTATION GENERALE**
N.S.V. பல் பொருள் வாணிபம்

TEL /FAX : 01 48 60 96 45
10 Ave. Henri Barbusse 93150 Le Blanc Mesnil

**S.P. RAJU JEWELLERY**

பழைய நகைகளுக்கு புதிய நகைகள் மாற்றிக்கொள்ள!!!!

வாடிக்கையாளர்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்கிவரும் நாம் பிறந்திருக்கும் 2012 இப்புதுவருடத்தில் தங்கநகை சேமிப்புத் திட்டத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



13 rue du Fbg St Denis
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail
75010 Paris
Tél: 01 46 07 43 42

**BEST SEA FOOD**
(S.A.R.L - SANTHOSH - Import Export)

மீன்வகைகள் அனைத்தும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இங்கே நாடவும்

17 Rue Perdonnet, 75010 PARIS Tel : 01 44 65 34 18
06 46 84 23 69
Gare de Nord - La Chapelle



10 வது வருடத்தில்
**குணா ரெய்லர்ஸ்**

(M° : Gare du Nord La Chapelle)

ஸ்தாபனத்தாரின் சிறப்புச்சலுகை

2 சாறி பிளவுஸ் தைப்பவர்களுக்கு 3 வது சாறி பிளவுஸ் இலவசம்!

8 rue Cail 75010 Paris Tél: 01 42 05 03 95

**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப் பூச்சி





கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly pest Control Vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
079 8358 9993
077 2346 7012

**CENTRE DE BEAUTE INDIEN**



தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்

தொடர்புகளுக்கு: பாலன்

33, rue Philippe de Girard
75010 Paris, M° : La Chapelle.
Tél.: 06 63 01 75 80

**Sport சாரதி பயிற்சி நிலையம்**

14 ஆண்டுகள் இலங்கையிலும், பரிசில் ஐந்து வருடமும் சாரதி பயிற்சி நிலையம் வைத்திருந்த அனுபவத்தவர்கள் Villiers Le Bel இல் தமிழ், ஆங்கிலம், பிரெஞ், ஹிந்தி மொழிகளிலான பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பறிக்கப்பட்ட சாரதிப்பத்திரத்தை மீளப்பெறவும்
புள்ளிகள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும்,
இழந்த புள்ளிகளை மீளப்பெறவும்

Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.39.94.10.28 / 06.13.38.85.50

**லக்கி ஸ்டார் சலூன்**
**LUCKY STAR SALOON**



23, Avenue P.V.Couturier
93120 La Courneuve
07 51 42 04 72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

### உலகின் மிகச் சிறந்த 500 அடையாளச் சின்னங்களில் (பிராண்ட்) அப்பிள் முதலிடம்

சர்வதேச ஆலோசனை சேவை நிறுவனமான பிராண்ட் பைனான்ஸ் (Brand Finance) உலக அளவில் தலைசிறந்து விளங்கும் நிறுவனங்கள் பற்றிய ஆய்வு ஒன்றை அண்மையில் மேற்கொண்டது. நிறுவன பிராண்டிற்கு உள்ள மதிப்பின் அடிப்படையில் இந்த நிறுவனங்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

உலக அளவில் தனி முத்திரை பதித்து வரும் 500 நிறுவனங்களிலும் முதல் 50 இடங்களைப் பிடித்துள்ள நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் வியப்பளிப்பதாக உள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த அப்பிள் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இந்நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு 7,060 கோடி டொலராக உயர்ந்துள்ளது. இதனையடுத்து இணையதள மெகா நிறுவனமான கூகுள் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.



ஏனைய முதல் 20 நிறுவனங்கள் இவைதான்.

01. APPLE
02. GOOGLE
03. MICROSOFT
04. IBM
05. WALMART
06. SAMSUNG
07. GENERAL ELECTRIC
08. COCA-COLA
09. VODAFONE
10. AMAZON
11. AT&T
12. VERIZON
13. HSBC
14. NTT
15. TOYOTA
16. WELLS FARGO
17. BANK OF AMERICA
18. MC DONALD'S
19. SHELL
20. INTEL




### ஈரான் மீதான தடையால் எண்ணெய் விலை உயர்வு

ஈரான் மீதான தடை காரணமாக மசகு எண்ணெய் விலை 30 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) தலைவர் கிரிஸ்டியன் லகார்டே எச்சரித்துள்ளார். ஐஎம்எப் தலைவரான லாகார்டே முதல் முறையாக இந்தியா சென்றுள்ளார். அவர் டில்லியில் நிருபர்களிடம் கூறியபோது, அணு ஆயுதம் தயாரிப்பு பிரச்சினை காரணமாக ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய அமெரிக்கா, ஐரோப்பா தடை விதித்துள்ளது. இதன் விளைவாக பற்றாக்குறை அதிகரிக்கும் என்பதால், மசகு எண்ணெய் விலை 30 சதவீதம் வரை உயர வாய்ப்புள்ளது. ஒரு பரல் விலை 125 டொலராக உயரலாம். திடீர் விலை உயர்வால் சர்வதேச பொருளாதாரம் பெரிதும் பாதிக்கும். குறிப்பாக இறக்குமதியை நம்பியுள்ள நாடுகள், குறைந்த வருமானம் கொண்ட நாடுகளை அது கடுமையாக பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார். இதேவேளை, அமெரிக்காவில் நியூயோர்க் முன்பேர வர்த்தக சந்தையில் கடந்த புதன்கிழமை ஒரு பரல் மசகு எண்ணெய் விலை உயர்ந்து 106.59 டொலராக அதிகரித்தது. உலக அளவில் மசகு எண்ணெய் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள சவூதி அரேபியா, ஈரான் மீதான தடையை அடுத்து தனது உற்பத்தியை 25 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. எனினும், இலண்டன் வர்த்தக சந்தையில் ஒரு பரல் மசகு எண்ணெய் 124.24 டொலராக கடந்த வாரம் உயர்ந்துள்ளது.

ஈரான் மீதான பொருளாதாரத் தடையை மீறி தொடர்ந்தும் மசகு எண்ணெய்யை அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்து வரும் இந்தியா உட்பட 11 நாடுகளுக்கு அமெரிக்கா விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளது. ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு முயற்சிக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைவிதித்தது. அமெரிக்காவின் இத்தடையை ஏற்று ஜப்பான், பெல்ஜியம் உள்ளிட்ட பலநாடுகள் ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை குறைத்துக் கொண்டன. இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளாதது பற்றி இந்தியா, சீனா உட்பட 12 நாடுகளிடம் அமெரிக்கா விளக்கம் கோரியுள்ளது. ஈரான் மீதான பொருளாதாரத் தடையை முழுமையாக அமல்படுத்தும்போதுதான் அணு ஆயுத தயாரிப்பு குறித்து ஈரான் ஒன்றுக்கு இரண்டுமுறை சிந்திக்கும் என்பது அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. இவ்விவகாரம் தொடர்பாக தனித்தனியாக எந்த ஒரு நாட்டுடனும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும் அனைத்து நாடுகளும் இத்தடையை நடைமுறைப்படுத்த ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை படிப்படியாக குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அரசு செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலந்த் தெரிவித்துள்ளார்.

## ஒபாமாவிற்கான...

முள்ளிவாய்க்கால் இனவழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது வன்னிப் போரின் இறுதி நாட்களில் உலக சமூகம் கைக்கொண்ட பாராமுகப் போக்கை நாம் ஆழமாக ஆராயும் பொழுது, இக்கடிதம் ஒபாமாவின் கரங்களை சென்றடைய வில்லை என்று கருதுவதற்கான காரணங்களே அதிகம் உள்ளன.

ஆனால் இக்கடிதம் தமக்குக் கிடைக்கப் பெற்றதை உருத்திரகுமாரன் குழுவினரால் மறுக்க முடியாது. வன்னியிலிருந்து இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட அன்றைய தினமே உருத்திரகுமாரனின் உதவியாளரால் சிறுகுறிப்பொன்று வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதில் இக்கடிதம் தமக்குக் கிடைக்கப் பெற்றதை உருத்திரகுமாரனின் உதவியாளர் உறுதிப்படுத்தியதோடு, 12.01.2009 அன்று (திங்கட்கிழமை) டனி டேவிஸ் அவர்களை நேரில் சந்தித்து அதனைக் கையளிப்பதற்கும் வாக்குறுதியளித்திருந்தார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட உருத்திர குமாரனின் உதவியாளரின் சிறுகுறிப்பின் தமிழ் வடிவம் பின்வருமாறு:

**"அன்பு அண்ணை,**

**நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. நன்றி.**

**டனி டேவிஸ் அவர்களுக்கான தனிப்பட்ட கடிதம் எப்பொழுது கிடைக்கும்? அதனையும் அனுப்பி வைக்க முடியுமா? வரும் திங்கட்கிழமை நான் அவரை சந்திக்கின்றேன். வெகு விரைவாக அக்கடிதத்தையும் நீங்கள் அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும்.**

**நான் அவற்றை அவரிடம் பிரத்தியேகமாகக் கையளிப்பேன்.**

**நன்றி"**

(தொடரும்)

## ஐ.நா. பிரேரணை நிறைவேற்றப்...

இந்த நிலையில்தான் வாக்களிப்பின் இறுதி நேரத்தில் தீர்மானத்தில் இந்தியா சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அதாவது நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே தீர்மானத்துடன் புதிதாக இணைக்கப்பட்டிருக்கின்ற பகுதி. எனவே இந்தப் புதிய பகுதியினை இணைக்க கேட்டதன் மூலம் இந்தியாவும், இணைத்துக் கொண்டதன் மூலம் அமெரிக்காவும் அடிப்படையில் தமிழர் நலனில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தற்போது ஐ.நா தீர்மானத்தின் கீழான எந்த நடவடிக்கைக்கும் தாம் ஒப்புதல் வழங்கப்போவதில்லை என சிறீலங்கா அரசு தெரிவித்திருக்கின்றது. இந்த நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் என்ன பயன்? இதற்கிடையில் இந்தத் தீர்மானமே அடிப்படையென்றும் இதன் பின்னர் அடுத்தக்கட்டம் சில நடவடிக்கைள் உள்ளதென்றும் சொல்லப்படுவதெல்லாம் வெறும் வார்வார்த்தைகளே என்பதைத் தமிழர்கள் புரிந்து கொண்டால் சரி.

இதேபோன்று 2009ம் ஆண்டில் யுத்தத்தை சிறீலங்கா அரசாங்கம் முழுவீச்சில் நடத்த சகல வழிகளிலும் உதவிபுரிந்த இந்தியா, அதனை நியாயப்படுத்துவதற்காகவும், மூடிமறைப்பதற்குமாக இலங்கைக்குள் மாற்று சக்திகள் உள்நுழைவதை இந்தியா உள்ளார்ந்தமாக விரும்பவில்லை. எனவே இந்த இடத்திலாவது இந்தியாவின் புராணம் பாடும் சிலர் வாயை மூடிக்கொள்வது சரியாக இருக்கும். இந்தியா காலத்திற்குக் காலம் செய்த அதே துரோகத்தை இன்றும் தமிழர்களுக்குச் செய்திருக்கின்றது.

இனிவரும் காலங்களிலும் செய்வதற்கு அது தயாராக இருக்கின்றது என்பதே உன்மை. ஐ.நா உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும், இலங்கையின் இறைமையை காக்கவுமே இந்த தீர்மானத்தை எடுத்திருப்பதாக நியாயம் சொல்லியிருக்கும் இந்தியா. இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆயுதங்கள் உட்பட சகல வசதிகளையும் செய்து கொடுத்தபோது இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது உள்நாட்டுப்போர் என்பது புரியவில்லையா? அல்லது இலங்கையின் உள்நாட்டு விடயத்தில், அதன் இறைமை விடயத்திலும் முன்னெப்போதும் இந்தியா தலையிட்டது கிடையாதா?

தன்னுடைய நாட்டிலுள்ள தமிழர்களையும், மனிதாபிமானமுள்ள மக்களையும் பகைத்து ஈழத்தமிழருக்குத் துரோகத்திற்கும் மேல் துரோகம் செய்து தெற்காசியப் பிராந்தியத்தில் நிலைப்பதற்காக சிறீலங்கா அரசுடன் உறவு கொண்டாடும் இந்தியா அரசு ஈழத் தமிழரின் பெயராலேயே அவர்களுக்குச் செய்த துரோகத்தினாலேயே ஒரு நாள் தூக்கி வீசப்படும்.

இது இவ்வாறிருக்க தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் (?) என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் கூட இராஜதந்திரம் என்ற போர்வையில் செய்திருப்பது மிகப்பெரிய துரோகம் என்றே கருதவேண்டியிருக்கின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானபோத அதை மறுதலித்து அதில் பிழைகள் இருப்பதை 105 பக்க அறிக்கையில் வெளிப்படுத்தியிருந்த கூட்டமைப்பு, ஆணைக்குழு அறிக்கையினை அடியொற்றியே அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டுவரப்படுகின்றது. ஆணைக்குழுவின் அறிக்கையினை இலங்கையில் நிராகரித்து விட்டு ஜெனீவாவில் ஆதரிக்க முடியுமா? நாங்கள்தான் அமெரிக்கா இந்த தீர்மானத்தை எடுக்க காரணம் என ஏக வசனம் பேசிய கூட்டமைப்பு இறுதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதனைத் வரவேற்றுமுள்ளது.

எனவே இந்த தீர்மானத்தில் தமிழர்களுக்கு எதுவுமே கிடையாது என்பதும், தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நாமாவது சர்வதேசத்திற்குச் சொல்லவேண்டும் என்பதும் கூட்டமைப்பிற்குத் தெரியாமல் இல்லை. தெரிந்தும் சொல்லாமல் இருந்ததே உண்மைக்கதை, எனவே மீட்சி பெற முடியாதளவு அவலத்தின் வாயிலில் தமிழர்கள் நின்றிருந்தபோதும், சரி, பிழைகளுக்கப்பால் தமிழ் மக்கள் கூட்டமைப்பை தெரிவு செய்திருந்தனர். ஆனால் கூட்டமைப்பு அந்த வரலாற்றுப் பொறுப்பை உதாசீனம் செய்திருக்கின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானபோது அதனை வெளிப்படையாக நிராகரித்திருந் கூட்டமைப்பு அதன் மூலம் தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியிருந்த நம்பிக்கையினை பின்னர் தவறாக பயன்படுத்தியிருக்கின்றது.

மற்றொரு பக்க யாதார்த்தம் என்னவென்றால், அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானம் தொடர்பாக ஏற்கனவே அறிந்திருந்த கூட்டமைப்பு, அமெரிக்கா தீர்மானத்தை கொண்டுவருகின்றது, எனவே ஜெனீவாவிற்குச் சென்று அந்த தீர்மானத்திற்கு இடையூறு விளைவிப்பதை அமெரிக்கா விரும்பப்போவதில்லை என கூறிக்கொண்ட கூட்டமைப்பு, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை இலங்கையில் நிராகரித்துவிட்டு வெளிநாட்டில் அதற்கு வலுச்சேர்க்க முடியுமா எனக்கேள்வியெழுப்பிய அதே கூட்டமைப்பு, வெளிநாட்டு சக்திகளின் நலன்களுக்காக எமது அபிலாசைகளை விற்றுத் தீர்த்திருக்கின்றதே தவிர எங்களுடைய அபிலாசைகளை, எங்களுடைய இனத்தின் சுயமரியாதை உணர்வுகளை ஒருபோதும் சர்வதேசத்திற்குச் சொல்லவில்லை.

சர்வதேச சக்திகள் தருவதைத்தான் வாயை மூடிக் கொண்டு பெற்றுக் கொள்ளவேண்டும் என்றிருந்தால் 2009ம் ஆண்டின் நிறைவில் உலகத்தை கண்விழிக்கச் செய்த விடுதலைப் புலிகளினதும், ஆயிரமாயிரம் அப்பாவி மக்களினதும் உன்னதமான மரணமும், புலம்பெயர் தமிழர்களின் போராட்ட சக்தியும் போதும். கூட்டமைப்பு வேண்டாப்பொருள். எனவே சர்வதேசம் இலங்கையில் நடைபெற்று முடிந்த போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்துவத்திற்கெதிரான குற்றங்களுக்கான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணையொன்றினையே தமிழர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் இன்றுவரையில் எதுவுமே கிடைக்காத நிலையில், கிடைத்த சந்தர்ப்பங்களிலும் எமது நிலைப்பாடுகளில் உறுதியும், எமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் தன்மையும் இன்மையினாலுமே இன்றுவரை தமிழர்கள் நிர்க்கதி நிலையில், ஆக்கிரமிப்புக்களுக்கும், அடாவடிகளுக்கும் பலியாவோராக மாறியிருக்கின்றோம். ஒவ்வொரு தமிழனும் தன்னுடையதும் தனது இனம்சார்ந்தும் அரசியலை கையிலெடுக்கவேண்டும், அரசியலை வெறுமனே அரசியல்வாதிகளிடம் விட்டுவிடும் பண்பாட்டை மறக்கவேண்டும். இதுவொன்றே தமிழர்கள் அடுத்த தலைமுறையிலாவது மீட்சிபெறுவதற்கு இருக்கின்ற ஒரே வழி. விடுதலைப் புலிகள் போன்று அடிப்படைக் கொள்கைளில் விட்டுக்கொடுப்பின்றி, வலிவானதும் இனம்சார்ந்து சிந்திக்கத் தலைப்படுவதுமான ஒரு அரசியல் சக்தி இருக்கவேண்டும். அது இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் நலன்களுக்காக பேசாத அந்த நலன்களை எமது மக்கள் மீது சுமத்தாத ஒன்றாகவும் இருக்கவேண்டும். அப்போதே அடுத்த தலைமுறையாவது நிம்மதியாக வாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Nisan Euro Exo Marché



உங்கள் சகல மளிகைத் தேவைகளுக்கும் ஒரே இடம்!

01 48 35 45 03

37, Av.Paul Vaillant Couturier 93120 La Courneuve

Blanc Mesnil - Drancyயில் தமிழர்களுக்கான புதிய உதயம்

## NARU COIFFURE

21, AV DE LA REPUBLIQUE
93150 LE BLANC MESNIL

06 59 49 16 80

RER: B - DRANCY



## RATHUS COIFFURE



உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள

Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44

23, rue Cail - 75010 Paris
Tél.: 01 46 07 82 90
M: Gare du Nord La Chapelle

இந்திரா உணவகம்

இலங்கை இந்திய உணவுகளின் சுவையகம்.

## INDRA RESTAURANT



64, rue louis blanc
75010 PARIS
Tél: 01 42 05 16 66

உங்கள் சாதாரண தோற்றத்தை கவர்ச்சியானதாக்கும் கலை வண்ணம் எம்மிடம் உள்ளது.

## NEW SAGANA COIFFURE

மேசை அழைப்பிதழ்கள் மிகக்குறைந்த விலையில்....

திருமணம் • பூப்புனித நீராட்டுவிழா • பிறந்த நாள் • முதல் நன்மை • புது நன்மை

INVITATIONS MENAKA CARD CHENNAI • INDIA

அழைப்பிதழ்கள் அனைத்தையும் தரமாகக் குறித்த தவணையில் மலிவு விலையில் அச்சிட்டுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது

## தமிழாலயம் ISHWARA

19 rue Cail - 75010 Paris
Tél.: 01 53 26 59 21 Fax: 01 53 26 90 88

## Ocean Indien





30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு

195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

## விமல் Vimal

Directeur Commercial

1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax.: 01 39 83 68 81 Rép.: 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00

## தங்க மாளிகை
THANKA MALIKAI

தங்க நகைகள்
ஆடை அணிகலன்கள்
அன்பளிப்பு பொருட்கள்...



199 rue de Fbg.St.Denis
75010 PARIS
01 42 05 39 05

## NEW MADRAS

Spécialitées Indiene & Srilankaise

உங்கள் விருப்பம் போல்...விழாக்கள், கொண்டாட்டங்களுக்குத்தேவையான உணவு வகைகளை பெற்றுக்கொள்வதற்கு உகந்த இடம்!

5 Rue Caill - 75010 PARIS
Tél : 01 42 05 08 94

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



## COIFFURE VITHUSA

TÉL: 01 48 34 90 44

40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

M°: Aubervilers 4 chemmins
Bus: 170,150,249,152

Mob: 06 13 06 20 29
Tel : 01 39 80 85 23

கேக், மணவறை, வீடியோ,.போட்டோ அகன்ற திரை, உணவு வகை, மண்டப ஒழுங்குகள், மற்றும் உங்கள் விழாக்களுக்கான ஒழுங்குகள் அனைத்திற்கும்.

## BABY
BALOON DECORATION

## பாரீஸ் அறிவாலயம்



பாரீஸ் மாநகரில் 10வது ஆண்டில் அறிவாலயம்

Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

## S.P TRADERS



உங்கள் மளிகைத்தேவைகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்!

197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M°: Gare du Nord / La Chapelle

## La Gare EXO MARCHE

DRANCY RER





அனைத்து மளிகைத் தேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்.

214, rue Anatole France; 93700 Drancy
Tél : 01 48 95 24 80

## AMBAL STORE

பல் பொருள் அங்காடி



Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.St.Denis-75010 PARIS

## M.S Photo

உங்கள் மங்கள நிகழ்வுகளை பதிவாக்கிக்கொள்ள.



RATHAN & RUBHAN Tél: 06 69 08 29 38

## திருப்பதி வீடியோ

வீடியோ படப்பிடிப்புக்களுக்கும் மண்டப ஒழுங்குகளுக்கும்.

அனைத்து மங்கள நிகழ்வுகளுக்கும்!!!



மகேசன் 01 60 17 74 86

WWW.THIRUPPATHYVIDEOS.COM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டின் தென்மேற்கே உள்ள துளூஸ் நகரில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரு சக்கர வாகனத்தில் (ஸ்கூட்டர்) சென்று ஏழு தொடர் கொலைகளைப் புரிந்த இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான். 32 மணி நேர முற்றுகையின் பின்னர், தாக்குதலை நடத்தியபடி தப்பிச்செல்ல முயன்ற போதே குறிப்பிட்ட இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். பிரான்சில் ஜனாதிபதிக்கான தேர்தல் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் சம்பவமாக இது நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி விரிவாகப் பார்ப்போம். கடந்த 15ம் திகதி Montauban பகுதியில் வைத்து மூன்று இராணுவத்தினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. வங்கியின் பணம்பெறும் தானியக்க இயந்திரத்தருகில் இவர்கள் மூவரும் நின்றபோதே உந்துருளி ஒன்றில் தலைக்கவசத்துடன் வந்த இளைஞன் இவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளான். இருவர் சம்பவ இடத்திலேயே பலியாக, ஒருவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, கடந்த 11ம் திகதியும் இந்தப் பகுதியில் இதே முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு படையினர் பலியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. நான்கு நாட்களுக்குள் இது இரண்டாவது தாக்குதல். உயிரிழந்த படையினர்கள் பிரெஞ்சு 17வது பாரசூட் படையணியைச் சேர்ந்தவர்கள். அவர்களது முகாமிற்கு அருகிலேயே வைத்து இவர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். இது தொடர்பாக தீவிர விசாரணைக்கு பிரெஞ்சு ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசி உத்தரவிட்டிருந்த நிலையில், சம்பவம் இடம்பெற்று இரு தினங்களின் பின்னர் கடந்த 19ம் திகதி மேலும் அதிர்ச்சிதரும் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

பிரான்சின் தென்மேற்கு பகுதி நகரமான துளூஸ் நகரத்தில் யூதர்களின் பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 3 யூதக் குழந்தைகளும், ஒரு யூதமதகுருவும் பலியானார்கள். மேலும் ஒரு மாணவர் காயமடைந்தார். முதலில் 9 மி.மி. துப்பாக்கியொன்றை பயன்படுத்தியதாகவும் அது செயற்படாத நிலையில், .45 கலிபர் ரக துப்பாக்கியொன்றை பயன்படுத்தி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்திருந்தனர். இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட அதே பாணியில் உந்துருளியில் வந்தே இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டது. பிரான்ஸ் மட்டுமல்ல யூதர்கள் மீதான தாக்குதலால் இஸ்ரேலும் கடும் அதிர்ச்சியடைந்தது.

இராணுவத்தினர் மீதும், யூதப் பாடசாலையின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் ஒரே மாதிரியானவையாக இருந்தபோதிலும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவுமில்லை என ஆரம்பத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியிருந்தனர். பிரெஞ்சு ஜனாதிபதி சார்கோசி உடனடியாக துளூஸ் நகருக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். இத்தாக்குதல் ஒரு தேசிய அனர்த்தம் என்று கூறிய அவர், கொலையாளியை உடனடியாகக் கண்டுபிடித்து, தண்டனை வழங்குவதாகவும் உறுதியளித்தார். இதேவேளை, இத்தாக்குதல் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்துமாறு பிரான்சை இஸ்ரேலும் வலியுறுத்தியது.

பிரெஞ்சு குற்றப்புலனாய்வுத்துறையினர் இப்படுகொலைகள் தொடர்பாக தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்நிலையில் கடந்த 21ம் திகதி புதன்கிழமை அதிகாலை மூன்று மணிக்கு துளூஸ் நகரில் உள்ள அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றை முற்றுகையிட்ட காவல்துறையினர், 5 மாடிக் கட்டடம் ஒன்றில் பதுங்கி இருந்த கொலையாளியைக் கைது செய்ய முயன்றனர். ஆனால் அவன் சரணடைய மறுத்து, கைது செய்யச்சென்ற காவல்துறையினர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தினான். இதன்போது காவல்துறையினர் சிலர் காயமடைந்தனர். பிரான்சின் முற்றுகைக்கான சிறப்புத் தாக்குதல் அதிரடிப்படையினரான RAID படையினர் வரவழைக்கப்பட்டு, பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, வீட்டினுள் இருந்த அவனுடன் ஒரு பேச்சுவார்த்தைக் குழுவினர் வோக்கி–ரோக்கி ஊடாக தொடர்புகொண்டு பேசினர். அப்போது அவனுடைய பெயர் முகமது மெரா (வயது 23) என்றும் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற அல்ஜீரியா வம்சாவளியை சேர்ந்தவன் என்பதுடன், பயங்கரவாத அமைப்பான அல்–கைடாவிடம் பயிற்சி பெற்றவன் என்பதும் தெரியவந்தது. பாலஸ்தீன சிறார்களின் மரணத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கைகளைத்தான் மேற்கொண்டதாகவும், ஏழு பேரினது படுகொலைகளுக்கும் தானே பொறுப்பு என்று கூறியதுடன், மேலும் பலரது பட்டியல் தம்மிடம் உள்ளதாகவும் எச்சரித்திருந்தான்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளுக்குச் சென்றுவந்ததால் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞன், அமெரிக்காவிற்கு பயணம் செய்யமுடியாதபடி அந்நாடு இவனது பெயரை கறுப்புப் பட்டியலிலும் சேர்த்திருந்தது. அத்துடன், ஆப்கானிஸ்தானில் கந்தகார் நகரில் வைத்து முன்னர் கைது செய்யப்பட்டவர் எனவும் பிரெஞ்சு உள்துறை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தைக் குழுவினர் தொடர்ச்சியாக பேச்சுக்களில் ஈடுபட்டு காவல் துறையினரிடம் சரணடைய வைக்க முயன்றபோதும், அதனை மறுத்த கொலையாளி காவற்துறையினர் மீது அடிக்கடி வேட்டுக்களையும் தீர்த்துள்ளான்.

ஆயுதத்துடன் இருப்பதால் அதிரடியாகப் படையினர் நுழைந்தால், தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்பதால், அவனை உயிருடன் பிடிப்பதற்காக RAID படையினர் பலத்த பொறுமை காத்து தொடர்ந்து கண்காணித்துவந்தனர். அத்துடன், அவனைச் சரணடைய வைப்பதற்கான அழுத்தங்களை ஏற்படுத்துதற்காக அவனிருந்த வீட்டின் ஜன்னல் ஒன்றைத் தகர்த்திருந்ததுடன், அடிக்கடி பாரிய சத்தவெடி குண்டுகளையும் வீசி எச்சரிக்கைகளையும் செய்தனர்.

**ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளுக்கு சென்றுவந்ததால் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞன், அமெரிக்காவிற்கு பயணம் செய்யமுடியாதபடி அந்நாடு இவனது பெயரை கறுப்புப் பட்டியலிலும் சேர்த்திருந்தது**

# பிரான்சை அதிரவைத்த ஏழு படுகொலைகள்

## 32 மணி நேர முற்றுகையில் கொலையாளி சுட்டுக்கொலை



எனினும், 30 மணி நேரத்தைக் கடந்தும் இளைஞன் சரணடைய முன்வரவில்லை. இதனால், தாக்குதல் நடத்தி கைது செய்யும் முடிவுக்கு வந்த படையினர், வியாழன் காலை 11.30 மணியளவில் நடவடிக்கையில் இறங்கினர்.

தகர்க்கப்பட்ட யன்னலின் வழியாக படையினர் உள்நுழைந்தபோது, இளைஞன் குளியலறைத் தொட்டிக்குள் பதுங்கியிருந்துள்ளான். கண்காணிப்புக் கமெராவை உள்ளே அனுப்பி நிலைமையை அவதானிக்க படையினர் முயன்றபோது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி வெளியே பாய்ந்து வந்த இளைஞன், நேராக இன்னொரு ஜன்னல்ப் பக்கம் சென்றுள்ளார். அங்கிருந்தபடி கீழே நின்ற காவல்த்துறையினரை நோக்கியும் வேட்டுக்களைத் தீர்த்துள்ளான். அப்போது, எதிர்க்கட்டடம் ஒன்றில் தயார் நிலையில் நின்றிருந்த குறிசூட்டுப் படையினர் இளைஞனைச் சுட்டுவீழ்த்தியுள்ளனர். ஜன்னலில் இருந்து குதித்து இளைஞன் தற்கொலை செய்துகொண்டதாக உள்துறை அமைச்சர் வெளியிட்ட முதல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், பின்னர் குறிசூட்டப் படையினரால் தலையில் சுட்டுவீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்துடன், 32 மணி நேர முற்றுகையும் முடிவுக்கு வந்தது.

முன்னதாக, சந்தேக நபரின் வாகனத்திற்குள் இருந்து ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டிருந்ததுடன், இவரது தாயும் சகோதரனும் கைது செய்யப்பட்டிருந்தனர். வீடுகளிலும், தனிநபர்களிடம் கொள்ளையில் ஈடுபட்டுவந்த இக்கொலையாளி, சுமார் 20 ஆயிரம் ஈரோக்கள் பெறுமதியான ஆயுதங்களை கைவசம் வைத்திருந்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது.

முகமது மெராவுக்கு உடந்தையாக செயல்பட்டவர்கள் யாரும் இருக்கிறார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்று கூறியுள்ள பிரெஞ்சு ஜனாதிபதி சார்கோசி, இந்தப் பயங்கரவாதியின் செயல்களை அடிப்படையாக வைத்து பிரான்சின் முஸ்லிம் சமூகம் மீது அவப்பெயர் கற்பிக்கக்கூடாது என்றும் எமது முஸ்லிம் சகோதரக் குடிமக்களுக்கும், ஒரு முட்டாள்தனமான பயங்கரவாதியின் செயலுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும் கூறியதுடன், பிரான்ஸ் எப்பொழுதும் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்கும்' என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, தீவிரவாதிகளின் இணையத்தளங்களை தேடிப் பிடித்துப் படிப்பவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கவும் பிரான்ஸ் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். சர்வதேச அளவில் அதிகரித்து வரும் தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டியது அவசியம். இதில் பிரான்சும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தீவிரவாதிகளின் இணையத்தளங்களைத் தொடர்ச்சியாகப் பார்ப்பவர்கள், தீவிரவாதிகளை உருவாக்குவது போன்ற கருத்துகளை இணையத்தளங்களில் வெளியிடுபவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட கொலையாளின் மூத்த சகோதரரான அப்துல்காதர் மெரா (29 வயது) தனது சகோதரனின் செயலைப்பார்த்து பெருமையடைவதாக விசாரணையின்போது கூறியுள்ளது பிரான்சில்

(23ம் பக்கம் பார்க்க)



- விவேகன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இனியவைகூறல் குறள்-99

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**

இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக் கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

# மாற்றம்



ஒரு கொள்ளைக்காரன் இருந்தான். அவனைக் கண்டாலே ஊரே நடுங்கியது. பஞ்சமாபாதகன் என அவனைத் தூற்றியது. ஊர் மக்களின் பயமே தன் பலம் எனவும், உறவுகளின் நடுக்கமே தனக்குரிய மரியாதை எனவும் அவன் பெருமிதப்பட்டான். கல் போல் திடமாய் இருந்த அவன், நெஞ்சை நிமிர்த்திப் பிறரை இம்சித்தவன், திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டான். மரணத்தின் வாசலுக்கே சென்றுவிட்டான். அதன் காரணமாய் தன்னைக் கண்டு பயந்து நடுங்கியவர்கள் தன்னுடன் சினேகமாய் அன்புடன் பேச வேண்டும் எனவும், ஆதரவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் ஆசைப்பட்டான்.

ஆனால் அவனது நிலை குறித்து மற்றவர்கள் மகிழ்ந்தனரே அன்றி, அவனுடன் அன்பாகச் சினேகம்கொள்ள முன்வரவில்லை. அது அவன் மனதைப் பெரிதும் பாதித்தது. அதனால் அவன் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளானான். திருந்திவிட்ட என்னை மற்றவர்கள் ஏற்கவில்லையே என வேதனைப்பட்டவன், தன் ஊரிலிருந்த சன்னியாசியைச் சந்தித்தான்.

தன் மனநிலை குறித்து வருத்தத்துடன், 'என்னை மற்றவர்கள் சக மனிதனாய் ஏற்றுக்கொள்ள என்ன வழி?' என வினவினான்.

சன்னியாசியும் புண்பட்ட அவனது மனநிலையை அறிந்து, 'நீ உன் தீய செயல்களில் இருந்து மனப்பூர்வமாய் விலகிவிடத் தயாராய் இருக்கிறாயா? அப்படியானால் உன் மனதிற்குத் தெளிவை ஏற்படுத்த முயற்சிக்கிறேன்' என்றார்.

பின் அவனை ஓர் இருண்ட அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரே துர்நாற்றமாயிருந்தது. சுவாசிக்கத் திணறிய கொள்ளையன், 'இங்கு ஒரே நாற்றமாக உள்ளது. வாருங்கள்! வெளியே போய்விடலாம்' என்றபடியே அந்த அறையை விட்டு வெளியே ஓடிவந்து விட்டான்.

அதைக் கண்டு புன்னகைத்த சன்னியாசி, 'தம்பி... இந்தத் துர்நாற்றத்தைப் போலத்தான் உனது துர்க்குணம் உன்னிடமிருந்து மற்றவர்களைப் பிரித்து வைத்தது. ஆனால் அறியாமையினால் அதை உன் பலம் என நினைத்தாய். இந்தத் துர்நாற்றத்திற்கான காரணத்தைக் கண்டு அதை இந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்திவிட்டால் இடம் தூய்மையாகிவிடும்' என்றார்.

அதன்படியே அந்த அறையின் இக்கட்டான ஒரு முலையில் செத்துக்கிடந்த எலியை எடுத்து அப்புறப் படுத்தினான் கொள்ளையன். ஆனாலும் அந்த அறையில் இன்னும் கொஞ்சம் நாற்றம் இருப்பதாக அவன் உணர்ந்தான். என்ன ஒரு வித்தியாசம், முன்பு குபீரென அடித்த நாற்றம், தற்சமயம் இலேசாய் அடித்தது.

உடனே அவன் சன்னியாசியை நோக்கி, 'ஐயா... அடைமழை விட்டாலும் தூறல் விடாது என்பதைப் போல இன்னும் அந்த துர்நாற்றம் இருக்கிறதே?' என்றான் கவலையுடன்.

அதைக் கேட்ட சன்னியாசி, 'அப்படியா... அப்படியானால் இந்த அறையின் ஜன்னல் கதவுகளை எல்லாம் நன்றாய்த் திறந்துவிடு' என்றார். அவனும் அவ்வாறே செய்தான்.

ஜன்னல் கதவுகளைத் திறந்ததும் குபுகுபுவென உள்ளே புகுந்த புதுக்காற்று மிச்சமிருந்த துர்வாடையை அப்படியே அள்ளிக் கொண்டு போனது. தோட்டத்திலிருந்து தென்றல் சுமந்துவந்த பூக்களின் நறுமணம் அங்கே வீச ஆரம்பித்தது.

கொள்ளையனும் மக்கள் நம்மை உடனே ஏற்றுக் கொண்டுவிட மாட்டார்கள். அதற்காக நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என தெளிவு பெற்றான்.

'மனதைத் திறந்து வைத்தால் பகைவன்கூட நண்பன் ஆகிவிடுவான்' என்ற ஞான வார்த்தைக்கு பொருள் புரிந்தது அவனுக்கு.

– வை. ரமணி




## புதிர்க் கேள்வி

**சென்ற புதிர் கேள்விக்கான விடை**

சவப்பெட்டி.

## தகவல் முற்றம்

- பூமியின் நிலப்பரப்பு 14 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர்.
- ஆசிய நாடுகளில் ஒவ்வொரு பசுவும் தனது வாழ்நாளில் 12 முதல் 15 ஆயிரம் லீற்றர் வரை பால் தருகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய பசுக்கள் 22 ஆயிரம் லீற்றர் வரை பால் தருகின்றன.
- ஐப்பசி மாதத்தை துலா அதாவது தராசு மாதம் என்று சொல்வார்கள். தராசின் இரு தட்டுக்களும் சமநிலையில் இருப்பது போன்று ஐப்பசி மாதத்தில் மட்டும் இரவும் பகலும் சம அளவில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.
- பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. எனவே அவை நெடுநேரம் எவ்வளவு வேகமாகப் பறந்தாலும் வியர்த்துக் கொட்டுவதில்லை.
- பாதி நிலவில் கிடைப்பதை போல் ஒன்பது மடங்கு வெளிச்சம் பௌர்ணமி நாளன்று கிடைக்கிறது.
- உலகில் உள்ள அத்தனை கடல்களின் நீரில் இருந்தும் உப்பை தனியே பிரித்து எடுத்து விட்டால் அப்போது கடல் மட்டத்தில் சுமார் 100 அடி தாழ்ந்து விடும். ஏனெனில் கடல் நீரில் சராசரியாக 35 சதவீதம் உப்புத் தன்மை உள்ளது.

## இதற்கு விளக்கம் வேண்டாமே...!



## அமெரிக்கா - கனடாவிற்கு கிடைத்த கொடை



உலகிலேயே மிகப் பெரிய ஏரி ஹகஸ்பியன் ஏரி? என்றுதான் பலரும் நினைக்கின்றார்கள். ஆனால், உண்மையில், இது ஓர் உப்பு நீர் (கடல்நீர்) ஏரியாகும். உலகின் பெரிய நன்னீர் ஏரி எது என்றால் அது, அமெரிக்கா - கனடா எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சுப்பீரியர் ஏரி (Lake Superior) ஆகும். 82 ஆயிரத்து 103 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த ஏரி ஒரு குட்டிக் கடல் போலவே விளங்குகிறது. கப்பல் போக்குவரத்து, கரையை மோதும் அலைகள் என்று அப்படியே ஒரு கடல் போல காட்சியளிக்கிறது சுப்பீரியர் ஏரி.

வட அமெரிக்காவில் உள்ள 5 பெரிய ஏரிகளுள் ஒன்றான சுப்பீரியர், வடக்கே கனடாவின் ஒன்டேரியா- அமெரிக்காவின் மின்னசோட்டாவையும், தெற்கே அமெரிக்காவின் விஸ்கான்சின், மிச்சிகன் மாநிலங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. சுப்பீரியர் ஏரிக்கு 17ம் நூற்றாண்டில் இந்தப் பெயரைச் சூட்டியவர்கள் பிரெஞ்சு ஆய்வாளர்கள்.

அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாநிலத்தை விடப் பெரியதான சுப்பீரியர் ஏரியின் அதிக பட்ச நீளம் 563 கிலோ மீற்றர்கள், அதிகபட்ச அகலம் 257 கிலோ மீற்றர்கள் என்பதிலிருந்து இது எவ்வளவு பெரிய ஏரி என்று கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள். இந்த ஏரியின் அதிகபட்ச ஆழம் 1333 அடிகள் ஆகும். இந்த ஏரி, 2900 கனசதுர மைல் அளவுக்கு தண்ணீரைக் கொண்டுள்ளது. மொத்தம் 4 ஆயிரத்து 387 கி.மீ. நீள கரைப் பகுதியைக் கொண்டுள்ள சுப்பீரியர் ஏரியில், ஐல் ரோயல்,




அப்போஸ்டில் என்ற இரு தீவுகள் அமைந்திருக்கின்றன.

இந்த ஏரியில் அவ்வப்போது புயல்கள் வீசுவது உண்டு. அப்போது 20 அடியிலிருந்து 30 அடி உயரத்துக்கு அலைகள் எழும்பும். கடல் மட்டத்திலிருந்து 600 அடி உயரத்தில் அமைந்துள்ள சுப்பீரியர் ஏரியில் நிபிகான், செயின்ட் லூயிஸ், பீஜியன், பிக், ஒயிட், மிசிபிகோட்டென், காமினிஸ்டிக்யா ஆகிய பெரிய ஆறுகள் உள்பட 200 சிற்றாறுகள் பாய்கின்றன. இந்த ஏரியிலிருந்து செயின்ட் மேரீஸ் நதி வெளியேறி, ஹிரன் ஏரியில் பாய்கிறது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சுப்பீரியர் ஏரிப் பகுதியில் மனிதர்கள் வசித்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. அமெரிக்கா, கனடாவின் மிகப் பெரும் நன்னீர் ஆதாரமாக உள்ள சுப்பீரியர் ஏரியை, அந்நாடுகளுக்கு இயற்கை அளித்த கொடை என்று தாராளமாகக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிச்சர்லாந்து

# இஸ்ரேலிய குடியேற்றங்கள் சர்வதேச விசாரணைக்கு ஐ.நா உத்தரவு

இஸ்ரேலிய குடியேற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நடத்த உத்தரவிடும் தீர்மானம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இஸ்ரேலிய குடியேற்றத் திட்டங்கள், பாலஸ்தீனர்களின் உரிமைகளை மீறுகிறதா என்பதை




ஆராய்வதற்கான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்பது உட்பட இஸ்ரேலுக்கு எதிரான 5 தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்புகளை அமைக்கும் இத்திட்டத்தின் மூலம் தங்களது பகுதியை ஆக்கிரமிக்கிறது என்பது பாலஸ்தீனத்தின் குற்றச்சாட்டு. இது தொடர்பான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இஸ்லாமிய நாடுகள் சார்பில் பாகிஸ்தான் முன்வைத்தது. கியூபா, வெனிசுவேலா, நோர்வே, இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 36 நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. இத்தாலி, ஸ்பெயின், உட்பட 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அமெரிக்கா மட்டுமே இஸ்ரேலுக்கு ஆதரவாக அதாவது தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தது. இத்தகைய தீர்மானங்களை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார். இதேவேளை, இது இரட்டைவேடத் தனமான, அநீதியான, அழிவேற்படுத்தும் தீர்மானம் எனவும் பிராந்தியத்தில் மேலும் பதற்றநிலையை ஏற்படுத்தும் எனவும் இஸ்ரேலிய தூதுவர் அஷரரொன் லெஷானோ யார் கூறினார். இஸ்ரேலானது இருநாடுகள் கொள்கையில் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் பலஸ்தீனர்களுடன் நேரடி இரு தரப்பு பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க வேண்டுமென இஸ்ரேல் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். தங்களது பிரதேசத்தில் இத்தீர்மானம் பதற்றத்தை அதிகரிக்கும் என்பதும் இஸ்ரேலின் கருத்து. ஆனால், இப்பிரேரணையை பலஸ்தீன அதிகார சபை வரவேற்றுள்ளது.

நோர்வே

## அமைச்சர் சொல்ஹெய்ம் பதவி நீக்கம்!

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். சொல்ஹெய்ம் வகித்து வந்த சுற்றாடல் மற்றும் வெளிநாட்டு



உதவிகள் அமைச்சர் பதவிக்கு வேறொருவரை நியமித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டின் கிராமப் பகுதியொன்றிற்கு தனது பணி தொடர்பான பயணமொன்றினை சொல்ஹெய்ம் மேற்கொண்டிருந்த வேளையிலேயே அவரது பதவி நீக்கம் குறித்தான செய்தியை சமத்துவ இடதுசாரிக் கட்சியின் தலைவர் அவுடுன் வைபக்கின் சொல்ஹெய்மிடம் கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. சொல்ஹெய்மிடம் இது தொடர்பாக கேட்ட போது, இது தொடர்பாக கருத்துச் சொல்ல ஒன்றுமில்லையெனக் கூறியுள்ளார். கட்சியின் புதிய தலைவராக லைபாக்கின் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே அமைச்சர் பதவியிலிருந்து சொல்ஹெய்ம் நீக்கப்பட்டுள்ளார். அனுபவம் மிக்க அமைச்சர்களில் ஒருவரான சொல்ஹெய்ம் 30 வருடங்களாக கட்சியின் செயற்பாட்டாளராக இருந்து வந்துள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர், கட்சித் தலைவர் மற்றும் ஐ.நா.வின் விசேட தூதுவர் உள்ளிட்ட பல பதவிகளையும் வகித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## ஊழலை ஒழிக்க இந்தியா, சீனாவுக்கு அழைப்பு

முக்கியமான சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஊழல் நடப்பதை தடுக்க, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பில் இந்தியாவும் சீனாவும் உறுப்பினர்களாக வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வலியுறுத்தி உள்ளார். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (ஓஇசிடி) உருவாக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த அமைப்பில் 38 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. உலக நாடுகளின் பொருளாதார பிரச்சினை, சுற்றுச்சூழல், கல்வி போன்ற பல முக்கிய விடயங்கள் குறித்து இந்த அமைப்பு புள்ளிவிவரங்கள் திரட்டி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள், கொள்கைகளை வகுத்து கொடுக்கிறது. இந்த அமைப்பில் இந்தியாவும் சீனாவும் சேர வேண்டும் என்று ஹிலாரி வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து ஹிலாரி கூறியதாவது: வளர்ந்து வரும் நாடுகளில் ஊழல் மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. முக்கியமான சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஊழல் நடப்பதால் பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, இந்த அமைப்பில் உள்ள நாடுகளின் நிறுவனங்கள் சர்வதேச அளவில் வர்த்தக பரிவர்த்தனை நடத்தும் போது ஊழல் நடக்காமல் தடுக்க வகை செய்யும். ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் மூலம் தடை கொண்டு வர இயலும். எனவே, பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் இந்தியா, சீனா, இந்தோனேசியா, சவுதி அரேபியா போன்ற நாடுகளும் இந்த அமைப்பில் சேர வேண்டும் என்று [illegible]

மலேசியா

## போட்டியில் பங்கேற்ற பெண்ணின் மார்பகம் வெடித்தது!

காட்டில் நெருக்கடிகளுக்கு மத்தியில் தாக்குப்பிடித்தல் தொடர்பான நிகழ்வொன்றில் பங்குபற்றிய பெண்ணொருவரின் செயற்கை மார்பகம் போட்டியொன்றின்போது வெடித்த சம்பவம் கடந்த வாரம் மலேசியாவில் இடம்பெற்றுள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றுக்காக மலே



சியாவின் காட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு ஒளிப்பதிவும் செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. இதில் பங்குபற்றிய பெண்கள் 10 பேர் சேற்று மல்யுத்தப் போட்டியொன்றிலும் ஈடுபட்டனர். அப்போது சுவீடனைச் சேர்ந்த லீனா ஹெல்க்விஸ்ட் எனும் 24 வயதான பெண், செயற்கை மார்பகத்தை அழகுபடுத்துவதற்காக பொருத்தியிருந்த சிலிக்கன் பை திடீரென வெடித்தது. இதனால் அப்போட்டி நிகழ்ச்சி கைவிடப்பட்டு அப்பெண் உடனடியாக உலங்குவானூர்தி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். 'அது திடீரென வெடித்துவிட்டது. என்ன நடந்ததென புரியாமல் ஏனைய யுவதிகள் திகைத்துக்கொண்டிருந்தனர்' என அப்பெண் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். இவர் தற்போது சுவீடனில் சத்திரசிகிச்சை செய்துகொள்வதற்கு காத்திருக்கிறார்.

பாகிஸ்தான்

## குடும்ப கௌரவத்திற்காக 943 பெண்கள் ஒருவருடத்தில் கொலை!

பாகிஸ்தானில் குடும்ப கௌரவத்தை பாதுகாப்பதற்காக கடந்த வருடம் குறைந்தபட்சம் 943 பெண்கள், சிறுமிகள் கொலை செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் குறைந்தபட்சம் 943 பெண்கள் கடந்த வருடம் பாகிஸ்தானில் கணவன், தந்தை,



மற்றும் சகோதரன் போன்றோரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 93 சிறுமியர்களும் உள்ளடங்குகின்றனர். எனினும் உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(22ம் பக்கம் பார்க்க)

### கலைப்பொருட்களை திருடியவருக்கு சிறை

சீனாவில் ஷான்டோங் என்ற நகரில் புராதன அருங்காட்சியகம் சீனாவை ஆண்ட கடைசி மன்னரின் அரண்மனையில் அமைந்துள்ளது. அங்கு ஏராளமான விலை உயர்ந்த கலைப்பொருட்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த புகழ்பெற்ற அருங்காட்சியகத்துக்குள் ஷி பைக்குயி என்ற விவசாயி நுழைந்து தங்கத்தில் செய்யப்பட்ட மொத்தம் 9 வகையான கலைப்பொருட்கள், நகைகள் ஆகியவற்றை திருடினார். தப்பி ஓடும் போது அதில் 5 பொருட்களை அவர் அருங்காட்சியக வளாகத்திலேயே தவறவிட்டார். மற்ற பொருட்களை அவர் விற்க முயன்றபோது காவல் துறையினரிடம் சிக்கிக் கொண்டார். இந்த திருட்டு வழக்கில் ஈடுபட்ட ஷி பைக்குயிக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சீன நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

### சர்ச்சிலின் பகல் தூக்க இரகசியம் ஏலத்தில்!

இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், தினந்தோறும் பிற்பகலில் தூங்குவார் என்பது பிரசித்திபெற்ற செய்தி. இரண்டாம் உலகப்போர் சமயத்தில், இங்கிலாந்தே பதற்றத்தில் இருந்தபோது கூட சர்ச்சில், பிற்பகல் தூக்கத்தைக் கைவிடவில்லை. போர் நேரத்தில்



எங்கு பார்த்தாலும் சத்தம் கேட்டபடியே இருக்கும். அந்த நேரத்தில் சர்ச்சில் எப்படி இடையூறு இல்லாமல் தூங்கினார் என்பது பலருக்கும் கேள்விக்குறியாக இருந்தது. இந்நிலையில், அவர் தனது காதுகளில் காது அடைப்பானை பொருத்திக்கொண்டு தூங்கி இருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது. அந்த காது அடைப்பான்கள், நார்போக் நகரில் உள்ள ஏல மையத்தில் ஏலம் விடப்படுகிறது. இந்த காது அடைப்பான்கள், தூய்மையான தேன் மெழுகு, கொட்டன், செம்மறி ஆட்டின் கம்பளியில் இருந்து எடுக்கப்பட்ட தைலம் ஆகியவற்றால் செய்யப்பட்டது. சர்ச்சிலின் பொருட்கள் ஏலம் விடப்படுவது, இது முதல் முறை அல்ல. அவர் பாதி புகைத்து விட்டு போட்ட சுருட்டு, 2010ம் ஆண்டு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.

### பகவத் கீதை மீதான தடை ரஷ்ய நீதிமன்றினால் தள்ளுபடி

ரஷ்யாவில் பகவத் கீதை நூலினை தடைசெய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்யப்பட்டுள்ளது. உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட பகவத் கீதை 1788ம் ஆண்டில் முதன் முதலாக ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டது. அத முதல் பல்வேறு ரஷ்ய மொழி பெயர்ப்பு பகவத் கீதைகள் வெளிவந்துள்ளன. சர்வதேச கிருஷ்ண பக்தி இயக்கத்தின் (இஸ்கான்) நிறுவுனர் பக்தி வேதானந்த பிரபு பாதாவின் 'பகவத் கீதை உள்ளது உள்ளபடி' என்ற மொழி பெயர்ப்பு நூல் பயங்கர வாதத்தை தூண்டுவதாக இருப்பதால் அதை தடை செய்யும் படி அரச தரப்பு வழக்கறிஞர்கள் டோம்ஸ்க் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

## இரண்டு உலகப் போர்களைச் சந்தித்த பாட்டி தூக்கில் தொங்கினார்!

இரண்டு உலகப் போர்களை தனது வாழ்நாளில் எதிர்கொண்ட 105 வயதான பாட்டி ஒருவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றுள்ளது. Anastasia Khoreva என்ற இந்தப் பாட்டி நுரையீரல் அழற்சி நோயினால் சமீப காலமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார். ரஷ்யாவின்



Darsun பிராந்தியத்தைச் சேர்ந்த இந்தப் பாட்டி ரஷ்யப் புரட்சி மற்றும் இரண்டு உலகப் போர்களையும் சந்தித்த அனுபவம் கொண்டவர். குறித்த பாட்டியின் மரணம் தொடர்பாக அயலவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நிறைவான வாழ்க்கை வாழ்ந்த அந்த பாட்டி தூக்கு மாட்டி இறந்தமை அதிர்ச்சியாக உள்ளது. அவர் சொர்க்கத்தில் நிம்மதியாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மரணத்துக்கு காத்திருப்பதாக அடிக்கடி தனது நண்பர்களிடம் கூறி வந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

## 8 பேருடன் மாயமானது விமானம்

சிலி நாட்டின் தெற்குபகுதியில் நோயாளி உட்பட 8 பேருடன் சென்ற சிறிய ரக விமானம் காணாமல்போயுள்ளது. சிலி நாட்டின் புன்டா அரினாஸ் நகரிலிருந்து சாண்டியாகோவிற்கு இவ்விமானம் பயணித்துள்ளது. இதன்போது அவ் விமானத்தில் ஒரு நோயாளி, 2 பயணிகள், 3 மருத்துவ அதிகாரிகள் மற்றும் 2 விமானிகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. டுவின் - டர்போபுராப் பீச்கிராப்ட் 300 ரக விமானமே இவ்வாறு காணாமல் போயுள்ளது. தேடுதல் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அந்நாட்டு விமானத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் எனவும் பயணித்த அனைவரும் இதில் உயிரிழந்திருக்கலாம் எனவும் அஞ்சப் படுகின்றது.

அநேமான சம்பவங்கள் உறவினர்கள் மற்றும் அனுதாபம் கொண்ட காவல்துறை உத்தியோகத்தர்களினால் மறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 2010ம் ஆண்டைவிட கடந்த வருடம் இத்தகைய 100 சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. பாகிஸ்தானில் பெண்கள் இரண்டாம் தர சமூகத்தினராக நடத்தப்படுவதாகவும் அங்கு வீட்டு வன்முறைகளுக்கு எதிராக சட்டங்கள் இல்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கொலை செய்யப்பட்டோரில் கிறிஸ்தவம் மற்றும் இந்து மதத்தை சேர்ந்த 7 பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தகாத உறவு குற்றச்சாட்டில் 595 பெண்களும் அனுமதியின்றி திருமணம் செய்துகொண்டதற்காக 219 பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகள் தொடர்பாக அரிதாகவே வழக்குகள் நடத்தப்படுவதாகவும் இச்சம்பவங்களை குடும்ப விவகாரங்கள் என்றுகூறி காவல்துறையினர் புறக்கணித்துவிடுகின்றனர் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரியா

## ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல அதிபர் மனைவிக்குத் தடை

சிரியாவில் அதிபர் பஷீர் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடந்து வருகிறது. இதில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர். ஆனாலும் ஆசாத் பதவி விலக மறுத்து வருகிறார். அதிபரின் மனைவி அஸ்மா பிரித்தானியாவில் பிறந்தவர். இவரும் தன்னை சர்வாதிகாரியாக அறிமுகம் செய்ய விரும்புகிறவர் என்றும், ஆடம்பரத்தில் மிகுந்த நாட்டம் கொண்டவர் என்றும் தகவல் சமீபத்தில் வெளியாகி பரபரப்பை



ஏற்படுத்தியது. இதற்கிடையில் சிரியாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அடுத்த கட்ட அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. ஆசாத்தின் மனைவி அஸ்மா மற்றும் அவரது குடும்பத்தினர் வங்கி பணத்தை முடக்கின. மேலும் இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்ய தடை விதித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக புருசெல்ஸ் தூதர் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் விக்டோரியா நூலன்ட் கூறுகையில், ஆசாத்தின் ஆட்சிக்கு இது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும்` என்று கூறினார். இதற்கிடையில் சிரியா பிரச்சினை பற்றி பேச்சு நடத்த சிறப்பு தூதுவரான கோபி அனன் விரைவில் ரஷ்யா, சீனா நாடுகளுக்கு செல்ல இருக்கிறார்.

சீனா

## மரண தண்டனைக் கைதிகளிடம் இருந்து உடலுறுப்புகளை எடுப்பதை கைவிட முடிவு

சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப் படுபவர்களின் உடலில் இருந்து உடல் உறுப்புகள் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முறையைக் அடுத்த ஐந்து ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டுவர சீன அரசு முடிவு செய்துள்ளது. இதனை சீன அரசு செய்தி ஊடகம் உறுதிப்படுத்தியுள்ளது. உடலுறுப்பு தானங்களுக்கு கைதிகளைச் சார்ந்திராமல் தேசிய அளவிலான உடலுறுப்பு தான மையங்களை புதிதாக ஏற்படுத்தப்போவதாக சீனாவின் சுகாதாரத்துறை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.



சீனாவில் உடலுறுப்பு மாற்று சிகிச்சைகளில் பயன்படுகின்ற மூன்றில் இரண்டு பங்கு உடலுறுப்புகள் மரணதண்டனைக்குள்ளான கைதிகளின் உடல்களிலிருந்து எடுக்கப்பட்டது என சீன அரசு ஊடகங்களில் முன்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மோசமான வழக்கம் எனக் கூறி மனித உரிமை அமைப்புக்கள் சீனாவை கடுமையாக விமர்சித்து வந்ததுள்ளன. மரண தண்டனைக் கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படுகின்ற தருணத்தில், அவர்களுக்கு மன அழுத்தம் தந்து உடலுறுப்பு தானம் வழங்குவதற்கு அதிகாரிகள் சம்மதம் வாங்கிவிடுகின்றனர் என மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

சீனா ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதாக நம்பப்படுகிறது. அங்கு எத்தனை பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது என்ற உத்தியோகபூர்வ எண்ணிக்கைகள் இரகசியமாகவே வைக்கப்படுகின்றன. மற்றவரின் உடலுறுப்பு தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அந்நாட்டில் அதிகம் என்றாலும் உடலுறுப்பு தானம் வழங்க முன்வருவோரின் எண்ணிக்கை அங்கு மிகவும் குறைவாக உள்ளது.

சீன மக்கள் பெரும்பான்மையானோர் உடலுறுப்பு தானம் வழங்க முன்வருவதில்லை. கலாச்சார மற்றும் மத நம்பிக்கைகள் காரணமாய் தங்கள் உடலுக்கு எவ்வித சேதமும் இல்லாமல் தாம் புதைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். அத்துடன், சீனாவில் பணத்துக்காக உடலுறுப்பை விற்பதற்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும், கறுப்புச் சந்தையில் சட்டவிரோதமாக உடலுறுப்பு வர்த்தகம் தாரளமாக இடம்பெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

அவுஸ்திரேலியா

## புகலிடம் கோரும் வெளிநாட்டவர்கள் இரண்டு மடங்காக அதிகரிப்பு

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கையாளர்களாக செல்லும் வெளிநாட்டவர்களுடைய வீதம் இரட்டிப்படைந்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு இலங்கை, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து புகலிடம் கோரி செல்பவர்களின் எண்ணிக்கை முன்னரை விட தற்போது அதிகரித்துள்ளது. வெளிநாட்டவர்களை அங்கீகரிக்கும் வீதம் அவுஸ்திரேலியாவில் 60 வீதமாகக் உள்ளது. ஆனால் பிரித்தானியாவில் இந்த நிலைமை 20 தொடக்கம் 30 வீதமாக காணப்படுகின்றது. அவுஸ்திரேலிய



புகலிடக் கோரிக்கையாளர்களின் இடைத்தங்கல் முகாம்களில் ஏற்பட்ட மோதலினால் 2009ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இவர்களின் வருகையில் வீழ்ச்சி காணப்பட்டது. ஆனாலும் தற்போது அந்த எண்ணிக்கையினை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக தரவுகள் குறிப்பிட்டுள்ளன. இதே வேளை உண்மையான அகதிகளுக்கு உதவ அவுஸ்திரேலிய அரசு எப்போதும் தயாராக உள்ளதாக குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி அவுஸ்திரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா

## உலக வங்கித் தலைவர் பதவிக்கு கடும் போட்டி!

உலகின் மிக முக்கிய அமைப்புகளில் ஒன்றான உலக வங்கியின் தலைமைப் பதவிக்கு, நைஜீரிய பெண் நிதியமைச்சர் உட்பட 3 பேர் போட்டியிடுகின்றனர். அமெரிக்க அதிபர் ஒபாமா கொரிய அமெரிக்க மருத்துவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு, 1944ம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் உலக வங்கி, பல்வேறு நாடுகளுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. இந்த அமைப்பு தொடங்கப்பட்டது முதல் இதுவரை அமெரிக்காவைச் சேர்ந்தவரே இதன் தலைவராகப் பதவி வகித்து வருகிறார். எனினும் தற்போது உலக வங்கி தலைவராக அமெரிக்கர் அல்லாத ஒருவர் முதல்முறையாக பொறுப்பேற்க உள்ளது உறுதியாகி உள்ளது.

தற்போது இதன் தலைவராக உள்ள ரொபர்ட் ஜோல்லிக் வரும் யூன் மாதம் ஓய்வு பெறுவதால், புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார். இந்த முறை, வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் உலக வங்கித் தலைவராக வேண்டும் என இந்தியா, ரஷ்யா, சீனாறு பிரேசில் உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் `பிரிக்ஸ்` அமைப்பு தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. அத்துடன், வளரும் நாடுகள் பலவும் வலியுறுத்தி வருகின்றன.

இதனையடுத்து உலக வங்கியின் தலைமைப் பதவிக்கு கொரிய - அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் ஜிம் யோங் கிம் என்பவருக்கு அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா ஆதரவு அளித்துள்ளார். இதனிடையே நைஜீரிய பெண் நிதியமைச்சர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இதன் காரணமாக, உலக வங்கித் தலைவர் பதவிக்கான தேர்வில் கடும் போட்டி நிலவுகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய சனிக்கிழமை கடைசிநாள் என்பது குறிப்பிடத்தக்கது. உலக வங்கியின் அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக, செயல் அதிகாரிகள் வாரிய கூட்டம் வரும் ஏப்ரல் 21ம் திகதி வாஷிங்டனில் நடைபெறுகிறது. அப்போதுதான் அடுத்த தலைவர் உறுதியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்


# ஜோர்ஜ் புஷ் போர்க்குற்றவாளி ஜெனீவாவில் குற்றச்சாட்டு

ஈராக்கில் அமெரிக்கா கடந்த 9 ஆண்டு களாக புரிந்துவரும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகள் பற்றி ஜெனீவா ஐ.நா. மனித உரிமை பேரவையில் நடைபெற்ற கலந்துரை யாடலுக்கு ஈராக்கைச் சேர்ந்த வைத்திய நிபுணர் டொக்டர் ஏ.டபிள்யு ஹசன் தலைமை தாங்கினார்.

அங்கு அவர் உரையாற்றியபோது கூறியதாவது, உண்மையிலேயே இன்று நாம் வேதனைப்பட வேண்டிய தினம். இன்றுடன் அமெரிக்கா ஈராக்கில் கால்பதித்து 9 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. இந்த 9 ஆண்டுகளில் அமெரிக்க படைகள் ஈராக்கில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களை படுகொலை செய்துள்ளது.

அமெரிக்கா விரைவில் ஈராக்கில் இருந்து தனது படைகளை திரும்பப்பெறும் என்று கூறினாலும் இப்போதும் 45 ஆயிரம் அமெரிக்க படையினர் சிவில் உடையில் ஈராக்கிய மக்களை கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் ஒரு இலட்சம் அமெரிக்க துருப்புக்கள் ஈராக்கில் இருப்பதுடன் அங்கு பணிபுரியும் அமெரிக்க இராஜதந்திரிகளுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களும் பாதுகாப்பு அளிப்பதற்காக 15 ஆயிரம் கூலிப் படைகளையும் அமெரிக்கா வைத்திருக்கிறது.

ஈராக்கில் யுத்தக் குற்றச்சாட்டுகளிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட சகல அமெரிக்கர்களும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உட்பட அனைவருமே சட்டபூர்வமான முறையில் தண்டிக்கப்பட வேண்டும். ஈராக்கில் பல்வேறு பூர்வீக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.



அவர்களின் ஒற்றுமையை சீர்குலைத்து வன்முறைகளையும் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வரும் அமெரிக்கா, ஈராக்கில் தங்கள் உத்தரவுப்படி தலையாட்டும் துரோகிகளை அதிகாரப்பீடத்தில் அமர்த்தி, தனது விருப்பப்படி கொடுங்கோல் ஆட்சியை செய்து வருகின்றது.

அமெரிக்கா இப்போது பாதுகாப்பு நிறுவனங்கள் என்ற பெயரில் ஈராக்கில் சுமார் 5,000 வரையிலான கூலிப்படைகளை சேவையில் அமர்த்தியுள்ளது. இவர்களே கார் குண்டுகளை வெடிக்கச் செய்து ஈராக்கில் மனித படுகொலைகளை செய்து வருகிறார்கள். ஈராக்கில் இருந்து உடனடியாக அமெரிக்கா வெளியேறி, அந்நாட்டில் மீண்டும் அமைதியையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்த இடமளிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார்.

## ஐ.நாவில் சிறீ....

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்றையும் நடத்தியுள்ளனர். அங்கு கருத்துத் தெரிவித்த அவர்கள், சிறீலங்கா அரசு ஒரு குறுகிய மனப்பாங்குடன் தமிழர்களை பார்க்கின்றார்கள் என்றும் சர்வதேசத்தை சிறீலங்கா அரசினால் ஏமாற்ற முடியாது என்றும் தெரிவித்தனர். அத்துடன், அமெரிக்கா முன்வைத்த பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளதுடன், பரிந்துரைகள் எந்தளவுக்கு அமுல்படுத்தப்படுகின்றது என்பதை கனடா உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் ஏதேனும் ஒன்றையாவது அரசு கடந்த காலங்களில் நடைமுறைப் படுத்தியுள்ளதா என்பதை அறிவதில் யாழ்ப்பாணத்துக்கு வந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் காட்டியதாகவும் இது தொடர்பாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் அவர்கள் துருவித் துருவி விசாரித்தனர் என்றும் யாழ்குடாச் செய்திகள் தெரிவித்தன.

குறிப்பாக 'யாழ். மாவட்டத்தில் குவிக்கப்பட்டுள்ள சிறீலங்கா இராணுவம் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதா?' என்பதையும் அவர்கள் வினவியுள்ளனர். இவற்றை நடைமுறைப்படுத்த எந்தளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் நிறைவடைந்துள்ளனவா என்பன உள்ளிட்ட விடயங்களிலும் கனேடியக் குழுவினர் ஆர்வம் காட்டினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே (23ம் திகதி) கனடா களத்தில் இறங்கி இந்த விசாரணைகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் பிரேரணைக்கு தனது ஆதரவை தொடர்ச்சியாக வழங்கிய கனடா, தற்போது அமெரிக்காவின் சிறீலங்கா மீதான அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான பணியில் தீவிரமாக இறங்கியுள்ளதையே கனடா நாடாளுமன்றக் குழுவினரின் பயணம் உறுதிப்படுத்துவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அல்ஜீரியா

## மலை இடுக்கில் விழுந்து பேருந்து விபத்து – 19 பேர் பலி

அல்ஜீரியாவில் பேருந்து ஒன்று மலை இடுக்கில் விழுந்ததில் 19 பேர் பலியானதாக



அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அல்ஜீரியத் தலைநகர் அல்ஜீர்ஸ் அருகேயுள்ள டியாரட் பகுதியில் பேருந்து சென்று கொண்டிருந்த போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மலை இடுக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 30 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும், பனி காரணமாகவும் இந்த விபத்து நடந்திருக்கலாம் எனவும் அந்நாட்டு வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

## பிரான்சை அதிரவைத்...

பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்போது பரிஸ் நகருக்கு கொண்டுவரப்பட்டுள்ள அப்துல்காதர், பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். தனது சகோதரனின் நடவடிக்கையில் இவரும் இணைந்து ஈடுபட்டாரா, ஆயுதக் கொள்வனவுகளில் இவருக்கும் பங்குள்ளதா மற்றும் பயங்கரவாத அமைப்புக்களுடனான இவரது தொடர்புகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 26ம் திகதி திங்களன்று சிறப்பு நீதிமன்றில் இவர் மீதான முதல்கட்ட விசாரணைகள் இடம்பெறவுள்ளன. கொலைக்கு பயன்படுத்தப்பட்ட உந்துருளியைத் திருடுவதற்கு இவரும் உடந்தையாக இருந்துள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவர் மீதான விசாரணைகள் மேலும் பல அதிர்ச்சிகளைக் கொண்டுவரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கொலையாளியை சுட்டுக் கொல்லாமல் உயிருடன் பிடித்திருக்கவேண்டும், அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும் என்றும் கடுமையான எதிர்ப்புக்களும், விமர்சனங்களும் RAID படையினருக்கு எதிராக கிளம்பியுள்ளது. கடுமையான எரிவுகளை ஏற்படுத்தக்கூடிய கண்ணீர்ப் புகைக் குண்டுகளை தொடர்ச்சியாக வீசி அவரை உயிருடன் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி அதன்மூலமாக மேலும் பல உண்மைகளை கண்டறிந்திருக்க முடியும் என்றும் குற்றச்சாட்டுக்கள் இப்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எதுஎப்படியாயினும், பாதுகாப்பு, குடியேற்றவாதம் என்பவற்றை நடந்து முடிந்த இந்தச் சம்பவம் எதிரொலிப்பதால், பிரான்சின் ஜனாதிபதி தேர்தலில் இது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவே இருக்கும் என்பதை மறுக்க முடியாது.

## தண்ணீரினால் உலகப் போர் வரும்!

நீர் நிலைகளை முறையாக பாதுகாக்கவில்லையென்றால் எதிர்காலத்தில் நாடுகளுக்கிடையே போர் ஏற்படும் என்று அமெரிக்க புலனாய்வுத்துறை தகவல் தெரிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் பரிந்துரையின்பேரில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி தெரிவித்துள்ளது.




அறிக்கையில் மேலும் குறிப்பிட்டதாவது: தெற்கு ஆசியாவில் ஓடும் பிரம்மபுத்திரா நதி, மத்திய கிழக்கு நாடுகளில் ஓடும் டைக்ரஸ் மற்றும் யுபரேட்டஸ் நதிகளை பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். அணைகள், தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றுக்கு தீவிரவாத அச்சுறுத்தல்கள் உள்ளன. அதனால் போதுமான பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். பல்வேறு நாடுகளில் ஓடும் நதியின் நீரினை பங்கிடுவதில் நாடுகளுக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. இது அடுத்த உலகப் போர் ஏற்பட வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனக்கு தானே சவப்பெட்டியை தயார் செய்தவர்

அமெரிக்கா புளோரிடா பகுதியில் வசிப்பவர் பிரெட் குயின்ரீட். தற்போது 89 வயதாகும் அவர் தபால் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பண்டைக்கால எகிப்திய கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்ட அவர் 10 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்துக்கு சுற்றுப்பயணம் செய்து பல்வேறு இடங்களை பார்வையிட்டார். அங்குள்ள நல்லடக்கம் செய்யும் முறைகள் அவருக்கு பிடித்து விட்டதால் தன்னுடைய மறைவுக்கு பிறகும் அதை பின்பற்ற தீர்மானித்தார். பின்னர் சொந்த ஊருக்கு திரும்பிய அவர் தனக்கு தானே சவப்பெட்டியை உருவாக்கினார். பழங்கால எகிப்திய புத்தகத்தை வாங்கி அதில் கூறப்பட்டிருப்பதை பின்பற்றி அதை செய்து முடித்தார். 7 அடி நீளம் கொண்ட அந்த பெட்டியின் மீது பலவர்ண படங்களை தீட்டி வைத்துள்ளார். இந்த பெட்டிக்குள் எப்போது அடங்கப்போகிறோம் என்ற ஆதங்கத்துடன் வாழ்நாளை அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ் - பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2012

ASS. DES HABITANTS DE PUNGUDUTIVU FRANCE

பிரான்ஸ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் 2012ம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான நிகழ்வும் எதிர்வரும் 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. அனைத்து புங்குடுதீவு மக்களையும், உறுப்பினர்களையும் தவறாது வருகை தந்து புதிய நிர்வாகத் தெரிவினைச் சிறப்பாக நடாத்தி ஒன்றியத்தின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை வழங்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்

இடம்: 50 Rue de Torcy, 75018 Paris (Marx Dormoy)

தொடர்புகளுக்கு : 06 64 50 92 02 | 06 62 22 66 40 | 06 51 30 72 35 | 06 14 08 63 55 | 06 03 37 38 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

**3/4 Fois sans Frais**
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

---

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

**உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்**




- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

Tél.: 01 76 58 42 07
Fax: 01 48 59 09 95

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
77 bis rue Robespierre
93100 Montreuil
சுதா / விமல் : 06 34 18 80 04

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

---

## வன்னி இறைச்சிக்கடை



M°: La Courneuve
Tram T1 - Arét : Danton

105, Avenue Jean Jaurés
93120 La Courneuve
Tél : 01 48 37 20 89

---

## உங்கள் தேவைகள் எங்கள் சேவைகள்

**We&You**
Event management
Group Foto Elanges

- புகைப்படம்
- வீடியோ
- மணவறை
- மண்டப அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- விழாக்களுக்கான உணவு சேவை
- விழாக்களுக்கான உடைகள்

www.fotoelanges.com

01 43 83 95 26 - 06 45 83 90 64

---

DRANCYஇல் புதிய உதயம்

## Délices De L'INDE

அனைத்துவகையான சைவ உணவுவகைகளையும், பலகார வகைகளையும் அனுபவம் வாய்ந்த சமையலாளர்களால் சுத்தமாக தயாரித்து வழங்குகிறோம்.



விழாக்கள் கொண்டாட்டங்களுக்கு தேவையான பலகார வகைகளையும், உணவு வகைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் விநியோகம் செய்கிறோம்

220 rue Anatole France,
93700 Drancy. Tél : 01 57 42 48 16

---

## ஏப்ரல் தொடக்கம் ஆரம்பமாகிறது

பெரியவர்களுக்கான

# பிரெஞ்சு வகுப்புக்கள்



**இடம்: சோதியா கலைக் கல்லூரி**
**28 Place de la chapelle**
**75018 Paris**
Mo: La Chapelle ou Gare du Nord

திங்கள் 15h00 - 17h00
செவ்வாய் 10h00 - 12h00
வியாழன் 10h00 - 12h00
வெள்ளி 15h00 - 17h00

**மேலதிக விபரங்களுக்கு**



சனி, ஞாயிறு, புதன் கிழமைகள் நேரடியாகவும்
தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளவும்.

**01 42 05 93 76**
**06 62 77 50 86**

தங்கள் பதிவுகளை விரைவாக உறுதிப்படுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org